காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 23, செவ்வாய்க்கிழமை 08.11.2016 | கதிர் 03



SK சிறி குமரன் ரெக்ஸ்
நவநாகரிக ஆடைகளின் சிறந்த தெரிவு
770, கே.கே.எஸ் வீதி, திட்டாதெருச்சந்தி யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2216845
சி-014)


# உள்ளூராட்சி மன்ற ஊழல் விவகாரம்: மாகாணசபையில் இன்று ஆராய்வு!

### அளப்பு அருணாசலம்



உது வெடிகுண்டோ...
இல்லாட்டி வெறும் வெத்து வேட்டு
அரசியல் குண்டோ...?

## பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை பெரும் சர்ச்சையைக் கிளப்பும் சாத்தியம்

யாழ்ப்பாணம், நவம்பர் 08

**வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வின்போது பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. பலஉள்ளூராட்சிமன்றங்களின் ஊழல் விவகாரங்கள் பற்றிய அம்சங்கள் இந்த அறிக்கையில் இருக்கலாம் என்று கருதப்படுவதால் இன்றைய அமர்வு சூடான வாதப் பிரதிவாதங்களுக்கும், களேபரங்களுக்கும் இடமளிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

யாழ்ப்பாணம் மாநகரசபை ஈ.பி.டி.பி. கட்சியினரின் நிர்வாகத்தின் கீழ் இருந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில் அங்கு இடம்பெற்றவை எனக் கூறப்படும் நிதி, நிர்வாக மோசடிகள், துஷ்பிரயோகங்கள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதேபோல 2013 காலப்பகுதியில் வவுனியா நகரசபை நிர்வா

பக்கம் 20»



தாக்குதலுக்கு இலக்கான அங்கவீனமான இராணுவத்தினர்

## அங்கவீனமான இராணுவத்தினரின் போராட்டத்தில் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி, தண்ணீர் பீய்ச்சித் தாக்கு!

அங்கவீனமான இராணுவத்தினர் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும் பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலால் அங்கவீனர்கள் பெரும் பாதிப்புக்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டனர்.

இராணுவத்தில் 12 வருடங்கள் பணியாற்றாது அங்கவீனம் அடைந்த இராணுவத்தினர் ஓய்வூதியம் கேட்டு கடந்த சில நாள்களாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கொழும்பு - காலி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பின்னர் அவர்கள் அத்துமீறி ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைய முயன்றனர்.

பக்கம் 20»

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை முடக்கவே செயற்பாட்டாளர் கைது!




### அரசின் திட்டத்தைச் சாடுகின்றார் கஜேந்திரகுமார்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை பிரச்சினைக்குரிய ஒரு தரப்பாகக்காட்டி கட்சியின் அரசியல் வேலைத்திட்டத்தை முடக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டு சோடிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்திருக்கின்றது.

இதன் ஓர் அங்கமாகவே கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை எங்களுடைய தீவிர செயற்பாட்டாளர் அலெக்ஸ் அரவிந்த் பொலிஸ் சீருடை வடிவில் காணப்பட்ட சிவில் உடையில் வந்த சிலரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இவர்கள் யார், எந்தப் பிரிவினர்கள் என்பன குறித்த தகவல்கள் எமக்கு இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை.

அலெக்ஸின் தாய், தந்தையர்களிடமும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாகவோ, மறைமுக

பக்கம் 20»

### 12 வருடப் பணி பூர்த்தியாகாவிட்டாலும்

## அங்கவீனமான படையினருக்கு ஓய்வூதியம் வழங்க இணக்கம்

கொழும்பு, நவ.08

இராணுவத்தில் இருந்தபோது அங்கவீனமடைந்து 12 வருடங்கள் பணியாற்றாது சுயவிருப்பின்பேரில் ஓய்வுபெற்றவர்களுக்கும் சேவை ஓய்வூதியம் வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

அவரின் உறுதிமொழியால் அங்கவீனமான இராணுவத்தினர் நடத்திய போராட்டம் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

இராணுவத்தில் 12 வருட காலப் பணி பூர்த்தியடையாத நிலையில் அங்கவீனமுற்று சுயவிருப்பின்பேரில் விலகியோருக்கு அடிப்படைச் சம்பளமும்,

பக்கம் 20»

### மறவன்புலோவில் மீட்கப்பட்ட

## தற்கொலைக் குண்டு அங்கியின் இலக்கு சுமந்திரன் எம்.பியா?

### சயந்தனின் உரை எழுப்பியுள்ள சந்தேகம்

தென்மராட்சி, நவ.08

கடந்த மாாச் மாதத்தில் மறவன்புலோ பகுதியில் மீட்கப்பட்ட தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதல் அங்கி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனை இலக்கு வைத்துக் கொண்டு வரப்பட்டதா?

சுமந்திரனுக்கு நெருக்கமான சட்டத்தரணியும், அவரது ஆதரவாளரும், வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான கே.சயந்தன் நேற்றுமுன்தினம் பொது நிகழ்வு ஒன்றில் ஆற்றிய உரையே இத்தகைய கேள்வியை எழுப்பியுள்ளது.

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் தமிழரசுக் கட்சியின் கிளை திறப்பு விழாவின்போது- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை முன்

பக்கம் 20»

## கொலைகள், முறையற்ற செயல்களுடன் ஈ.பி.டி.பியினர் சம்பந்தப்படவேயில்லை!

### அரசியலுக்காக சுமத்தப்பட்ட வீண் பழிகளே அவை என்கிறார் டக்ளஸ்

"அரசியல்கொலைகள், முறையற்றசெயற்பாடுகள் என ஈ.பி.டி.பி. மீது சுமத்தப்பட்டவை அனைத்தும் வெறும் குற்றச்சாட்டுக்களே. இவை அனைத்தும் அரசியல் காரணங்களுக்காக எமது கட்சி மீது சுமத்தப்பட்ட வீண் அபவாதப் பழிகளே."

-இப்படிக்கூறுகிறார் அந்தக்கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா.

புலிகள் அமைப்பை

பக்கம் 20»



காலைக்கதிர் Kalaikkathir



# மன்னார் புதைகுழி அகழ்வுக்கு நிபுணத்துவ அறிவு அவசியம்

## நேற்றைய விசாரணையில் நீதிவான் தெரிவிப்பு

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தையில் கண்டுபிடிக்கப்பட்டு ஏற்கனவே அகழ்வு இடம்பெற்ற மனிதப்புதைகுழியை மீண்டும் அகழ வேண்டுமாயின் மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவர்களின் நிபுணத்துவ அறிவைப் பெற வேண்டும் என மன்னார் மாவட்ட நீதிவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா கட்டளையிட்டார்.

இந்தப் புதைகுழிதொடர்பான வழக்கு விசாரணை நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றபோதே அவர் இந்தக் கட்டளையைப் பிறப்பித்தார்.

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயப் பகுதியிலிருந்து மாந்தைப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு கடந்த 23.12.2013 அன்று நிலத்தில் குழாய்கள் புதைக்கப்பட்டபோது அங்கு இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விடயம் பூதாகரமாகியதைத் தொடர்ந்து அப்போதைய மன்னார் நீதிவான் செல்வி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அகழ்வுப்பணி இடம்பெற்றது. சட்டவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டீ.எல்.வைத்தியரத்ன தலைமையில் 05.03.2014 வரை 33 தடவைகள் அகழ்வு இடம்பெற்ற போது 84 மனித மண்டையோடுகளும், எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த எச்சங்கள் பகுப்பாய்வுக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த எச்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட மூன்று நிறுவனங்கள்தொடர்பான விருப்பு, வெறுப்புக்கருத்துக்கள் காரணமாக அந்தப் பணிகள் இடம்பெறவில்லை.

இந்தநிலையில், மேற்படி வழக்கு நேற்று மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அங்கு நீதிவான் கட்டளை பிறப்பிக்கையில் –

கடந்த தவணைகளில் இடம்பெற்ற விசாரணைகளின் போது, மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக மூன்று ஆய்வு நிறுவனங்களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டன. புதைகுழியைத் தொடர்ந்து தோண்டுவதாக இருந்தால் அந்த நிறுவனங்களின் நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் புதைகுழியைத் தோண்டும் போது எந்தெந்த நிபுணர்கள் அங்கு பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்றும் அவர்களிடம் இருந்து அறிக்கையைப் பெற்று அடுத்த தவணையின் போது அதனை மன்றில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், வழக்குத் தொடுநர் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அரசசட்டத்தரணி ஆஜராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – என்றார்.

இந்தப்புதை குழி தொடர்பான வழக்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதேவேளை, மேற்படி புதைகுழிக்கு அருகாமையில் இருந்த கிணறு தொடர்பான வழக்கும் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பாக மன்னார் பொலிஸாரால் மன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக்கிணற்றில் அகழ்வு செய்யப்பட்டு கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் அரசபகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட நிலையில் எவ்வித சந்தேகங்களும் தென்படவில்லையென தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

இதனையடுத்து அந்த வழக்கை முடிவுக்கு கொண்டு வருவதாக நீதிவான் தெரிவித்தார். (ம-112)

# ஆவா குழுவை உருவாக்கியவர் யார் என்று எனக்குத் தெரியாது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் குற்றங்களைச் செய்யும் ஆவா குழுவை உருவாக்கியவர் யார் என்று எனக்குத் தெரியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஆவா குழுவை உருவாக்கியவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருந்தமை குறித்து நேற்று சந்திரிகாவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கில் தமிழ் அடிப்படைவாதிகள் இருப்பதுபோல தெற்கிலும் சிங்கள அடிப்படை வாதிகள் இருக்கின்றனர். ஆவா குழு வடக்கில் குற்றங்களை செய்துள்ளது.

தெற்கிலும் மேற்கிலும் இது போன்றவை தொடர்பான தகவல்கள் வெளியாவதில்லை என்றும் சந்திரிகா கூறினார். (ம)

# யாழ்., வவுனியாவின் சில இடங்களில் இன்று பகல் மின்சாரம் தடைப்படும்

மின்விநியோக மார்க்கங்களில் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 6.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும் என மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி உடுப்பிட்டி நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ளறோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களிலும் –

வவுனியா பிரதேசத்தில் மடுகந்த கிராமம், தெற்கிலுப்பைக் குளம் கிராமம், சிதம்பரபுரம், நேரியகுளத்தில் இருந்து செட்டிகுளம் வரையில், செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம் போன்ற இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் சிலாவத்துறையில் இருந்து அரிப்பு வரை, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (ம)

# மஸ்கெலியா தமிழ் பெண் சவூதியில் மர்மமாகச் சாவு

ரியாத், நவ.08

சவூதி அரேபியாவின் ரியாத் ஒலாய்யா முகாமில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

ஹட்டன் மஸ்கெலியா ஸ்டெர்ஸ்பி சூரியகந்த எனும் இடத்தைச்சேர்ந்த பழனியாண்டி கற்பக வள்ளி (வயது - 39) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த வருடம் ஒக்ரோபரில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றின் ஊடாக சவூதி அரேபியா சென்றுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி இவர் உயிரிழந்துள்ளார். ஆனால், இதுபற்றிஎந்தத் தகவலும் குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்று அறியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் இருந்து பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் அந்நாட்டு தடை முகாம்களில் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து சென்ற 80 இற்கும் மேற்பட்ட பணிப் பெண்கள் மேற்படி தடை முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என அண்மையில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தகவல் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என சவூதிக்கான இலங்கைத் தூதுவர் அஸ்மி தாஸிம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பழனியாண்டி கற்பவள்ளியின் பிரேத பரிசோதனை நிறைவடைந்ததன் பின்னர் மரணம் தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரள தெரிவித்துள்ளார்.(இ-11)

# கொல்லப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் அஞ்சலி



பொலிஸாரினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட கஜன் மற்றும் சுலக்சன் ஆகிய மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று திங்கட்கிழமை உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல்கலைக் கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.


கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது மாணவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தங்களை விட்டுப் பிரிந்த உற்ற நண்பர்களுக்கு சகமாணவர்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

இந்த நிகழ்வில் பதில் துணைவேந்தர் வேல்நம்பி, பதில்கலைப் பீடாதிபதி பேராசிரியர் சுதாகரன், மாணவ ஆலோசகர் உதயகுமார் கலைப் பீட மாணவ ஒன்றியத்தலைவர் க.ரஜீவன், பல்கலைக்கழக மாணவர்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். (ம-7-12)

# அநுராதபுரம் சிறைச்சாலைக்கு ரெலோ பிரதிநிதிகள் விஜயம்

## கைதிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கினர்



அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை ரெலோ இயக்கத் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், அக்கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது கைதிகளின் வழக்கு விசாரணைகளின் தற்போதைய நிலைப்பாடு, அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் ஆகியன குறித்து அவர்கள் இருவரும் கைதிகளிடம் கேட்டறிந்தனர்.

மேலும், கைதிகளின் தற்போதைய நிலை குறித்து சிறைச்சாலை அத்தியட்சகர் பண்டாரவுடன் கலந்துரையாடிய அவர்கள், கைதிகளின் தேவைகளைக் கவனத்தில் கொள்ளுமாறும் அவரிடம் கேட்டுக் கொண்டனர்.

இங்குள்ள தமிழ்க்கைதிகள் பிரத்தியேகமாகத் தொலைக்காட்சி பார்ப்பதற்காக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினால் தொலைக்காட்சிப்பெட்டியொன்று வழங்கப்பட்டது. கைதிகளுக்கு உணவுப்பார்சல்களும் அவர்களின் சிறு தேவைகளுக்கான ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டன. (ம)

# சீமெந்து வழங்கல்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 60 பயனாளிகளுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினரினால் தலா 10 சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

முன்பக்கம் பூச்சு இடப்படாமல் இருக்கும் வீடுகளுக்கு தலா பத்து பைக்கற் சீமெந்து வீதம் வழங்குமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அண்மையில் அறிவுறுத்தப்பட்டது.


இதனடிப்படையில் நேற்று திங்கட்கிழமை 60 பயனாளிகளுக்குத் தேசிய வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்களால் சீமெந்துப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

# 118 கிலோ கேரளக் கஞ்சா சுண்டிக்குளத்தில் மீட்பு!

கிளிநொச்சி, நவ. 08

யாழ்ப்பாணம் - வடமராட்சி - மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் கடற்கரை பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை பல இலட்சம் ரூபா பெறு மதியான 118 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் தருமபுரம் பொலிஸார் மற்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை சுண்டிக்குளம் கடற்கரையில் படகு ஒன்றில் இருந்து சந்தேகத்திற்கு இடமான விதத்தில் பொதிகள் இறக்கப்படுகின்றமையை கடற்றொழிலாளார்கள் அவதானித்தனர். அவர்கள் குறித்த இடத்துக்கு விரைந்து சென்றபோது பொதிகளை இறக்கிய படகு அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டது.



கஞ்சாவைப் பெறுவதற்காக கடற்கரையில் காத்திருந்த நபர்களும் தலைமறைவான நிலையில் கடற்றொழிலாளர்களால் தருமபுரம் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து அதிகாலை 5.30 மணிக்கு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சத்துரங்க தலைமையிலான குழுவினர் விரைந்து கஞ்சாப் பொதிகளை மீட்டுப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். 94 கிலோ கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டது.

இதேசமயம், கடற்கரையில் கஞ்சாவை இறக்கிய சமயம் 24 கிலோ பொதியை இருவர் மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்கின்றமையை அவதானித்த கடற்படையினர், அவர்களை சுற்றி வளைத்தனர். எனினும் அவர்கள் கஞ்சாப் பொதியை எறிந்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

அந்தக் கஞ்சாப் பொதியை மீட்ட கடற்படையினர் அதனை கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினர் ஊடாக தருமபுரம் பொலிஸாரிடம் கையளித்தனர்.

சந்தேக நபர்களைப் பிடிக்க தருமபுரம் பொலிஸார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலி கண்ணவின் வழிநடத்தலில் விசேட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

(இ-70-40)

## காலி ஜின் கங்கையின் நீர் மட்டம் உயர்வு மக்கள் பெரும் பாதிப்பு

கொழும்பு, நவ.08

காலிப் பகுதியில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் காலி ஜின் கங்கையின் பிரதான நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 4.2 மில்லி மீற்றர் அளவுக்கு நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக பிரதேசத்தின் பல பாகங்களிலும் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பத்தேகம - நாகொட பிரதான வீதியின் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பத்தேகம கிறிஸ்தவ கல்லூரிக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரிப்பதால் மக்கள் பெரியளவில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## பிரிட்டன் பொதுநலவாய அமைச்சர் வடக்கு முதலமைச்சரைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம், நவ.08

இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கிலும், இலங்கை மற்றும் பிரித்தானியாவுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலும் பிரிட்டன் பொதுநலவாய அலுவலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் பரோனீஸ் அன்லி பிசி இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவர் வடக்கு - கிழக்கில் உள்ள சிறுவர்கள், பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுப்படுத்தத் தேவையான உதவிகளை வழங்க தாம் தயாராக உள்ளனர் என்று வடமாகாண முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இராஜாங்க அமைச்சர் பரோனீஸ் அன்லிக்கும் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரனுக்கும் இடையில் நேற்று யாழ். கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது.



பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதுவர் ஜோன்ஸ் டய்யுறிஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் மற்றும் விதவைகள் தொடர்பாகவும் அவர்களுக்கு எவ்வாறான உதவிகள் தேவைப்படுகின்றது என்பது குறித்தும் தமக்கு விசேட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு பிரித்தானிய அமைச்சர் முதலமைச்சரிடம் கேட்டிருந்தார்.

இதேவேளை வாழ்வாதார ரீதியில் அவர்களை வலுப்படுத்த தாம் நிதியுதவிகளைச் செய்யத் தயாராக இருக்கின்றனர் என்றும் இராஜாங்க அமைச்சர் முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராசா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் உதவி தேவைப்படும் சிறுவர்கள், பெண்கள் தொடர்பிலும் அவர்கள் தரவுகளைத் திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-10)

## பட்டப்பகலில் மாணவி கடத்தப்பட்டு விடுவிப்பு

*வைரவப்புளியங்குளத்தில் சம்பவம்*

வவுனியா நவ.08

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில், கற்றல் நடவடிக்கைக்காகச் சென்ற மாணவி ஒருவரைப் பின் தொடர்ந்த இளைஞர்கள் சிலர் அவரைக் கடத்திச் சென்று புதுக்குளம் பகுதியில் விட்டுச் சென்றுள்ளனர் ஏன்று தெரியவருகிறது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமைகாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது :-

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு வந்த உயர்தர மாணவி ஒருவரை சில இளைஞர்கள் பின்தொடர்ந்து வந்துள்ளனர். வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு அண்மையில் வந்த போது குறித்த இளைஞர்கள் அந்த மாணவி வசம் இருந்த கைப்பை மற்றும் தொலைபேசி என்பவற்றை பறித்ததுடன். தொலைபேசியை செயலிழக்கச் செய்துள்ளனர்.

அதன் பின்னர் அந்த மாணவியை புதுக்குளம் பகுதியில் உள்ள வீதியில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர். அந்த மாணவியை எவ்வாறு அங்கு கொண்டு சென்றார்கள் என்பது குறித்து அந்த மாணவிக்குத் தெரியவில்லை.

சுமார் அரை மணி நேரத்துக்குள் இந்தச் சம்பவங்கள் இடம் பெற்ற நிலையில் புதுக்குளம் பகுதியில் நின்று குறித்த மாணவி தனது உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியமையையடுத்து அந்த மாணவி வீட்டாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

மாணவிக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாத காரணத்தாலும், தமது பிள்ளையின் எதிர்காலம் கருதியும் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை எனத் தெரிய வருகிறது.

இதேவேளை, வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தை அண்டிய பகுதியில் பொலிஸாரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுமாறும் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## 18 அடி நீளமான முதலை மாத்தறையில் பிடிபட்டது



இலங்கையில் மிகப் பெரியது எனக் கருதப்படும் முதலையை வனவளத் திணைக்கள அதிகாரிகள் பிடித்துள்ளனர்.

18 அடி நீளமான இந்த முதலை மாத்தறையின் வெல்கொட பிரதேசத்தில் நேற்று அதிகாலை பிடிபட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் நில்வள கங்கை பெருக்கெடுத்தது. பெருக்கெடுத்த வெள்ளத்தால் கரையொதுங்கிய இந்த முதலை கிராமத்துக்குள் புகுந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த முதலையைக் கண்ட மக்கள் வனவளத் திணைக்களத்துக்கு அறிவித்தனர். அப் பகுதிக்கு விரைந்த வனவளத் திணைக்கள அதிகாரிகள் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் அந்த முதலையைப் பிடித்துச் சென்றனர். 3 கால்களைக் கொண்ட இந்த முதலை பிறக்கும் போதே இந்தக் குறைபாட்டுடன் பிறந்திருக்கலாம் என அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர். பிடிபட்ட முதலை அதிகாரிகளினால் டிராக்டரில் ஏற்றப்பட்டு பாதுகாப்பாக நில் வள கங்கையில் விடப்பட்டது. (ஓ)



*கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் புதிய வகுப்பறை கட்டடத்திறப்புவிழா நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளார் க. முருகவேல் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு புதிய வகுப்பறைக் கட்டடத்தை திறந்து வைத்தார். மிக நீண்ட காலமாக போதிய வகுப்பறைக் கட்டடம் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த கலைமகள் வித்தியாலயத்துக்கு இந்த வகுப்பறைக் கட்டடம் ஒரு வரப் பிரசாதமாக அமைந்துள்ளது. பாடசாலை அதிபர் வெ. கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் க.கணேசலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் யோகன், விளையாட்டுக்குழுத் தலைவர் சீலன் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.*

(இ-70)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

# வெறும் நம்பிக்கை மட்டும் பயன்தராது!

"அரசமைப்புப் பேரவையில் இடம்பெறும் நகர்வுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை கொடுப்பனவாக அமையவில்லை. இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதில் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு, சர்வசன வாக்கெடுப்பு மூலம் நாட்டு மக்களின் அங்கீகார மென்று பல இக்கட்டுகள் உள்ளன. இவை எல்லாவற்றையும் தாண்டிவரும் சூழ்நிலை இல்லாதபோது மக்களுக்கு வெறுமனே நம்பிக்கையைக் கொடுத்துக்கொண்டிருப்பதால் என்ன பயன்?" - என்று நமது தமிழ் அரசியல் தலைமைகளைப் பார்த்து - சுய (தரப்பு) விசாரணைக் கேள்வி ஒன்றை எழுப்பி இருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இந்தக் கேள்வி நியாயமானதும் உண்மையானதும் யதார்த்த மானதும்தான்.

இனப்பிரச்சினையின் விளைவாக வெடித்த கொடூர யுத்தம் ஆயுத முனையில் அடக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், இனப்பிரச்சினைக்குத் தோற்றுவாயாக அமைந்த மூல விவகாரங்களுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. தீர்க்கப்படாத விவகாரமாக அது இழுபடுகின்றது.

புதிய அரசமைப்பு ஒன்றுக்கான தேடல் என்பது அத்தகைய பிரச்சினைக்குத் தீர்வு காணும் எத்தனத்தையும் நோக்காகக் கொண்டிருக்கின்றது என்றே கூறப்படுகின்றது. அந்த நோக்கத்தை எட்டுவதற்கான மார்க்கத்தில் நம்பிக்கை தரும் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையே முதல்வர் விக்னேஸ்வரனின் மேற்படி கருத்து நிலைப்பாடும் தொட்டுக் காட்டுகின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் முக்கியமாக மூன்று தரப்புகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அதேபோல அந்த முயற்சியில் முக்கியமாக மூன்று பிரதான அம்சங்களும் ஆராயப் படுகின்றன.

'நல்லாட்சி அரசில்' ஒன்றிணைந்து செயற்படுகிறோம் என்று கூறியபடி அரசுக்குள்ளேயே - ஆட்சித் தரப்புக்குள்ளேயே - கன்னை பிரிந்து நிற்கும் ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை இரண்டு தரப்புகள். மூன்றாவது தமிழர் தரப்பு - குறிப்பாக தமிழ் பேசும் மக்களை பிரதானமாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இதுபோலவே புதிய அரசமைப்பு மாற்றத்தில் முன்னெடுக்கப் படவேண்டிய முக்கிய அம்சங்களாகக் கருதப்படும் மூன்று விடயங்கள் முறையே - நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழித்தல், தேர்தல் முறைமையை மாற்றுதல், இனப் பிரச்சினைத் தீர்வுக்கு வழிகாட்டும் விதத்தில் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைத் திணித்ததும், அதன்மூலம் முதல் 17 ஆண்டுகள் அதிகாரத்தை முழு அளவில் ருசித்ததும் ஐ.தே. கட்சிதான். ஆனால், அந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையால் கடந்த 21 ஆண்டுகளாக அதிகாரத்தை முழுமையாக அனுபவிக்க முடியாமல், பெரும்பாலும் எதிரணியில் முடங்கிக் கிடந்து திண்டாடவேண்டிய சிக்கலுக்குள் மாட்டிக் கிடப்பதும் அக்கட்சியே. அதனால் அந்த முறைமையை மாற்றியமைக்க அது துடியாய்த் துடிக்கின்றது.

அதுபோல, ஐ.தே.கட்சி அரசால் கொண்டுவரப்பட்ட தற்போதைய அரசமைப்பின் தேர்தல் ஏற்பாடுகளால் - தேர்தல் நடவடிக்கை முறையால் - தான் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அதனால் உத்தேச அரசமைப்பு மாற்றத்தில் தேர்தல் முறைமையை மாற்றுவது குறித்துக் கண்ணாக இருக்கின்றது.

ஆக, இந்தப் பிரதான கட்சிகள் இரண்டும் தமது இலக்கை - நோக்கத்தை - உத்தேச அரசமைப்பு மாற்றத்தின் மூலம் எட்டிப் பிடிக்க வேண்டும் என்பதிலேயே குறியாய் நிற்கின்றன.

அதேசமயம், அரசமைப்பின் பிரதான விவகாரமான - இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கான விடயங்களை உள்ளடக்குவதில் - அவை ஈடுபாடு அதிகம் காட்டவில்லை. அத்தகைய ஈடுபாடு காட்டுவதற்கான சிரத்தையோ, நோக்கமோ, இலக்கோ அவற்றுக்குக் கிஞ்சித்தும் இல்லை.


மாறாக, அந்த முயற்சியில் ஈடுபடுகின்றவை போலத் தம்மைக் காட்டிக்கொண்டு, தம் வேலையை - தம் எதிர்பார்ப்பை - நிறைவேற்றிக்கொள்வதுதான் இந்தப் பிரதான இரண்டு கட்சிகளினதும் உள்நோக்கம் என்பது வெளிப்படையானது; தெளிவானது.

தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்போய், அதனால் தென்னிலங்கை சிங்கள மக்களின் வாக்கு வங்கியை இழந்து விடுவோம் என்ற அச்சம், காலம் காலமாக இனவாதத் தீயை வளர்த்து, அதில் அரசியல் குளிர்காய்ந்து, அதிகாரத்தை ருசித்து வந்த அந்தத் தரப்புகளுக்கு இருப்பது இயல்பானதுதான்.

அதனால், மஹிந்த, சம்பிக்க, விமல்வீரவன்ஸ என்ற நிழல் பூதங்களை முன்தள்ளி, அந்த இனவாதத் தரப்புகளின் தடுப்புகளின் பின்னால் ஒளிந்து, அரசியல் சித்து விளையாட்டுக் காட்டுவதில் குறியாக உள்ளன இந்த பிரதான இரண்டு தரப்புகளும்.

அத்தகைய சூழ்நிலையில் நம் மக்களுக்கு வெறுமனே நம்பிக்கையைக் கொடுத்துக்கொண்டிருப்பதில் என்ன பயன் என்று முதல்வர் விக்னேஸ்வரன் எழுப்பும் கேள்வி நியாயமானதே.


இத்தகைய அபரிமித நம்பிக்கையை நமது மக்களுக்கு ஊட்டும் விதத்தில் சமிக்ஞைகளை வெளிப்படுத்தி வரும் கூட்டமைப்பு வட்டாரங்கள் பதில்சொல்லவேண்டிய கேள்வி இது.




# அரிசி விற்பனையில் அதிக இலாபம் பெறுகின்றனர் யாழ்.வர்த்தகர்கள்

வவுனியா,நவ.08

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்படும் அரிசியில் யாழ்.வர்த்தகர்கள் அதிக இலாபம் பெற்று வருகின்றனர் என்று வவுனியா வர்த்தகர் வட்டாரங்கள் குற்றம் சாட்டுகின்றன.



வவுனியாவில் உள்ள அரிசி ஆலைகளில் கொள்வனவு செய்யப்படும் அரிசிகளில் கிலோ ஒன்றுக்கு 15 தொடக்கம் 20ரூபாய் வரை இலாபம் வைத்தே அவர்கள் விற்பனை செய்கிறார்கள் என்றும் வவுனியா அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அரிசி கொண்டு செல்லப்படுகின்ற போது கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் 50 சதம் போக்கு வரத்துச் செலவு ஏற்படுகிறது. அதன் பின் விற்கப்படுகின்ற அதிகரித்த விலையானது மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கான இலாபமே. அந்த வகையில் வவுனியாவில் சிவப்பு ஆட்டக்காரி அரிசி ஒரு கிலோ 82 ரூபா விற்பனை செய்யப் படுகிறது. அதே அரிசி யாழ்ப்பாணத்தில் 90 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப் படுகிறது.

சம்பா வவுனியாவில் 78 ரூபாவுக்கும் யாழில் 90 ரூபாவுக்கும் சிவப்பு (பச்சை) வவு னியாவில் 70 ரூபாவுக்கும் யாழில் 85 ரூபாவுக்கும் விற்பனை செய்யப் படுகிறது.

அந்தவகையில் யாழில் தற்போது அதிகரித்து காணப்படும் அரிசி விலையேற்றம் வவுனியா அரிசி ஆலை வியாபாரிகளால் ஏற்பட்டது அல்ல என்றும் தாம் விற்பனை செய்யும் அரிசிகளை மொத்தவியாபாரிகளிடம்கொள்வனவு செய்யும் யாழ் சில்லறை வியாபாரிகள் அதிக லாபம் ஈட்ட முயல்வதே அதற்குக் காரணம் என்றும்

ஆனால் யாழ் வர்த்தகர்கள் வவுனியாவில் அரிசி அதிக விலைக்கு விற்பனை செய்யப் படுவதாக கூறியே வாடிக்கையாளருக்கு விற்பனை செய்து வருகின்றனர் எனவும் வவுனியா அரிசி ஆலை உரிமையாளர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-100)

## விபசார விடுதி நடத்திய வழக்கில் சிவகீதாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, நவ.08

விபசார விடுதி நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரன் உள்ளிட்ட நால்வரை விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரன் தனது இல்லத்தின் ஒரு பகுதியில் பெண்களை வைத்து விபசாரம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவருடன் 3 பெண்களும் கைது செய்யப் பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளில் சிவகீதாவின் கணவரும் மேலும் 4 சந்தேகநபர்களும் கைது செய்யப் பட்டுப் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட 4 பெண்களும் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் எம்.கணேசராஜா நால்வரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு சட்ட மூலத்தில் திருத்தம்

கொழும்பு, நவ.08

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்ட மூலத்தைத் திருத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இதில் வெளிநாட்டு பணியாளர்களுக்கான ஓய்வூதியம் உள்ளிட்ட பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என்று பணியகத்தின் செயலாளர் ஜீ.எல். விதானகே குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொண்டு மிக விரைவில் அது சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-11)

## சிகை அலங்கரிப்புச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று

வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களின் சங்கப் பொதுக் கூட்டம் இன்று வவுனியா முத்தையா மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதற்காக மாவட்டத்தின் அனைத்து சிகை அலங்கரிப்பாளர்களும் தங்கள் நிலையங்களைப் பூட்டி கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### நாளை

09.11.2016
புதன்கிழமை
திதி : நவமி மு.ப 7.47 வரை
நட்சத்திரம் : சதயம்
பி.இ. 12.01 வரை
சுபநேரம் 04.35 – 06.05
இராகுகாலம் 12.05 – 01.35

# மன்னார் வீடமைப்புத் திட்டம் பார்வையிட்டார் பாக்.தூதுவர்

மன்னார், நவ.08

இடம்பெயர்ந்து 26 ஆண்டுகளுக்கும் மேலாகத் தென்னிலங்கையில் வாழ்ந்து வரும் மன்னார் மாவட்ட மக்களின் மீள்குடியேற்றத்துக்கு பாகிஸ்தான் அரசு வீடுகளை அமைத்து வருகிறது.

இந்த வீடமைப்பு உதவிகளுக்காக அந்த நாட்டு அரசுக்கு அமைச்சர் ரிசாட் பதியுதீன் நன்றிகளைத் தெரிவித்தார்.

மன்னாருக்கு அமைச்சருடன் விஜயம் செய்திருந்த பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் ஷெய்ட் ஷகீல் ஹுசைன், மன்னார் புதுக்குடியிருப்பில் தமது நாட்டு அரசின் நிதி உதவியால் அமைக்கப்பட்டு வரும் வீடுகளைப் பார்வையிட்டார். அதன் பின்னர் அங்கு இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாட் உரையாற்றினார்.

அங்குஅமைச்சர் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தான், இலங்கையுடன் மிக நெருக்கமான நட்புறவைக் கொண்ட நாடு. இலங்கையின் அயல்நாடான பாகிஸ்தான் எமது நாட்டுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி நல்கி வருகிறது. அத்துடன், இலங்கை துன்பகரமான சூழ்நிலைகளில் இருந்த காலங்களில் அந்தநாடு எமக்குக் கைகொடுத்து உதவியுள்ளது.



26 ஆண்டு காலம் புத்தளத்திலும் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக வாழ்ந்த இந்த மக்களின் இருப்பிடத் தேவைக்கு வீடுகள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் பாகிஸ்தான் அரசு வழங்கிய நிதி உதவியில் 230 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 200 வீடுகள் முஸ்லிம்களுக்கும் 20 வீடுகள் தமிழர்களுக்கும் 10 வீடுகள் சிங்களவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன! என்றார்.

பாகிஸ்தான் தூதுவர் அமைச்சருடன் இணைந்து புதுக்குடியிருப்பு கோணார் பண்ணையில் சவூதி தனவந்தரின் உதவி யுடன் அமைக்கப்படவுள்ள மர்கஸ் அல்இஸ்லாமிய பள்ளி வாசலுக்கான அடிக்கல்லையும் நட்டு வைத்தார். முன்னதாக அங்கு இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிலும் உரையாற்றினார்.

புதுக்குடியிருப்புக்கு விஜயம் செய்த போதுஅங்குள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டு அறிந்தார்.

பின்னர் நானாட்டான் பிரிவில் சிங்கள,தமிழ்மக்களுக்கு அமைக்கப்பட்டு வரும் வீடுகளையும் தூதுவர் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வுகளில் மாகாண சபை உறுப்பினர் ரிப் கான் பதியுதீன், மன்னார் பிரதேச செயலாளர் வசந்தகுமார், நானாட்டான் பிரதேச செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## சா/த மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்.நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய இரவுப் பாடசாலை ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ். பிரபல ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர்களால் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

விஞ்ஞானம், தமிழ், கணிதம், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கும் வினாத்தாள்கள் பற்றிய அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளன.

கனடாவைச் சேர்ந்த அமரர் குயின்ரன் தக்ஷாயினி ஞாபகார்த்தமாக இலவசமாக இது இடம்பெறவுள்ளது. பங்கு பற்றிப் பயன்பெற விரும்பும் மாணவர்கள்அனைவரும்0771284776, 077 3031841 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தங்கள் பிரவேசத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று கூறப்பட்டது.குறித்த பாடங்கள் தொடர்பான வினாத்தாள்கள், கையேடுகள் போன்றன இலவசமாக வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (ஐ-7)

## காணிகளின் உரிமையாளருக்கு விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.08

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/88 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சொந்தப் பெயரில் அல்லது தங்களுடைய பரம்பரை ஆதாரம் கோரும் வகையில் காணிகள் இருப்பவர்களுக்குக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். முயித்தீன் பள்ளி வீதியில் அமைந்துள்ள மண்பஉல் மதரஸாவில் காலை 9 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதன்போது தங்களது காணிகளின் உறுதிப் பிரதியைக் கொண்டு வருமாறு கூறப்பட்டுள்ளது.

கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட காணி செயற் குழுவின் ஒருங்கிணைப்பாளர் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் குறிப்பிட்டுள்ளார்.

இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-7)

# தமிழரை மீண்டும் அதலபாதாளத்துக்குள் தள்ள முயல்கின்றார் வடக்கின் ஆளுநர்

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



தமிழ் மக்களை மீண்டும் அதல பாதாளத்துக்குக் கொண்டு செல்லும் -ஏமாற்றும் -நடவடிக்கைகளில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே இறங்கியுள்ளார். இது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு சாடியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

வடக்கில் இராணுவத்தைக் குறைக்க வேண்டியதில்லை என்றும் ஆவா குழுவுக்கும் இராணுவத்துக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என்றும் ஆளுநர் கூரே அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் நேற்று முன்தினம் கேட்டபோதே மேற்கண்ட வாறு அவர் தெரிவித்தார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மைக் காலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் மீது தமிழ் மாணவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று கூறி அதைப் பெரிய இனவாதமாகவும், தமிழர்கள், சிங்கள மாணவர்களைத் தாக்குகிறார்கள் என்று சிங்கள மாணவர்களை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண ஆளுநர், சிங்கள மக்களிடம் இனவாதத் தன்மையை ஏற்படுத்தியிருந்தார்.

அதே சமயம்,பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டபோது அதைப் பற்றி எதுவும்பேசாமல், அதற்காக அந்த மாணவர்கள் போராட்டம் நடத்தி எழுத்து மூலமாகக் கருத்துக்களை வழங்கியபோது அதற்கு சிங்கள மொழியில் ஒரு கடிதத்தை எழுதி மகாவம்சத்தின் சிங்கள பேரினவாத எண்ணத்தை வடக்கு மாகாண ஆளுநர் காட்டியிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் என்பவற்றின் பின்னணியில் இங்கு குவிக்கப்பட்டிருக்கும் இராணுவமே காரணம் என பல் வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

2014 ஆம் ஆண்டு ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இங்கு எந்த இராணுவ முகாமும் குறைக்கப்படவில்லை. யுத்தம் இல்லாத சூழலில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து பயிர்ச்செய்கை, மரக்கறி செய்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அதேசமயம், சாதாரணமாக சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்தி அப்பாவித் தமிழர்கள் அதன் மூலம் எடுக்கும் வருமானத்தைத் தடுக்கும் செயற்பாடுகளில்ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் அரசபயங்கரவாதத்தின் அடக்கு முறையை எடுத்துக்காட்டுகின்றன.

அமைச்சர் ராஜித சேனரட்ன ஆவா குழு, கோட்டாபய ராஜபக்ஷவின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டது என்பதைத் தெளிவாகவே சொல்லியுள்ளார். அவ்வாறு அவர் குறிப்பிட்ட பின்னரும் கூட, பெரும் எண்ணிக்கையான இராணுவம் குவிக்கப்பட்ட சமயத்தில் இந்தக் குழு செயற்பட எவ்வாறு முடியும் என்ற செய்தியை முதலமைச்சர்விக்னேஸ்வரன்வெளிப்படையாகக் கேட்டிருந்தார்.

வடக்கு மாகாணஆளுநர்ரெஜினோல்ட் கூரே ஏதேச்சதிகாரத்தோடும் ஆணவச் செருக் கோடும் அந்தக் கேள்விகளை முன்வைத்திருக்கின்றமை– அவற்றை மூடி மறைப்பதும், ஒரு காலத்தில் "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று தமிழர்களைப்போருக்கு அழைத்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவையும் டி.பி விஜயதுங்கவையும் மஹிந்தவையும் விஞ்சிய வகையில் சமாதானம் பேசிக் கொண்டு வந்த ரெஜினோல்ட்கூரே யின் செயற்பாடுகள் அமைந்துள்ளன். – என்றார். (ஐ)



கரணவாய் மணியகாரம் தோட்டம் அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் கே.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. கலந்துகொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திருமதி சி. சிவசோதி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஐ-40)

## அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் நாளை புதன்கிழமை இரு விசேட உரைகள் இடம்பெறவுள்ளன.

மாலை 6 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத்தின் துணைத் தலைவர் ந. கருணை ஆனந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் குற்றச் செயல்களும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் என்ற தலைப்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நோயல் பிரான்ஸிஸும் வாகன விபத்துக்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் என்ற தலைப்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரட்ணமும் உரையாற்றவுள்ளனர்.

இத்துடன் எதிரவரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இலக்கியக்களம் நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினரான திருமதி.வளர்மதி சுமாதரன் தலைமையில் 'நாத ஒலியின் நுண்பொருள்' இலக்கியம் என்ற தலைப்பில் திருமதி சிவானந்த ஜோதி ஞானசூரியம் உரையாற்றவுள்ளார்.

# முறக்கொட்டாஞ்சேனை மனித எச்சங்கள் அறிக்கை கொழும்பில் நேற்று சமர்ப்பிப்பு

## உறுதிப்படுத்திய பின்னர் தோண்டும் நடவடிக்கை!

மட்டக்களப்பு, நவ.08

மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் இராணுவ முகாம் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணியில் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலான அறிக்கையை ஏறாவூர் பொலிஸார் கொழும்பிலுள்ள சிரேஷ்ட வைத்திய நிபுனரிடம் நேற்று சமர்ப்பித்தார்.

கடந்த மாதம் குறித்த காணியில் மலசலகூடம் அமைப்பதற்காக கிடங்கு வெட்டியபோது, மனித எச்சங்கள் என்று கருதப்படும் சில தடயங்கள் எரிந்த நிலையில் வெளிப்பட்டன.

இது தொடர்பில் கிராம அலுவலர்மூலமாகஏறாவூர்ப்பொலிஸ் நிலையத்தில் காணி உரிமையாளர் முறைப்பாடு செய்தார்.

இந்தநிலையில், குறித்த இடத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு, கட்டுமானப் பணி நிறுத்தப்பட்டது.

இதனை அடுத்து, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி

> “கடந்தமாதம் குறித்த காணியில் மலசலகூடம் அமைப்பதற்காக கிடங்கு வெட்டியபோது, மனித எச்சங்கள் என்று கருதப்படும் சில தடயங்கள் எரிந்த நிலையில் வெளிப்பட்டன.”

எம்.ஐ.எம்.றிஸ்வியும் மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் பி.சீ.சாணக்க பெரேராவும் குறித்த இடத்தைப் பார்வையிட்டு, மனித எச்சங்கள் இருப்பதை அவதானித்தனர்.

இந்த விவகாரம் தொடர்பான அறிக்கையை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் சமர்ப்பித்தனர்.

சம்பவ இடம் மற்றும் மனித எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் தடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து குறித்த சட்ட வைத்திய நிபுணரிடம் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி உத்தரவிட்டார். இதனை அடுத்து, குறித்த சட்ட வைத்தியநிபுணரிடம் அறிக்கையைப் பொலிஸார் சமர்ப்பித்துள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய சிரேஷ்ட சட்ட வைத்திய நிபுணர், அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் குறித்த இடத்துக்கு பயணம் செய்யும் தினத்தை அறிவிக்கவுள்ளனர்.

குறித்த இடத்தில் அவர்கள் ஆய்வை மேற்கொண்டு விடயத்தை உறுதிப்படுத்திய பின்னர், நீதிமன்ற அனுமதியைப்பெற்று தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மனித எச்சங்கள் காணப்படுகின்றமை தொடர்பான நீதிமன்ற விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சுகாதாரம் பேணாத உணவக உரியையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்

மட்டக்களப்பு, நவ.08

மட்டக்களப்பு, வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடிப் பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது உரிய முறையில் சுகாதாரத்தைப் பேணாத 26 உணவகங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

அத்துடன் இரு உணவ கங்கள் மற்றும் குடி தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றின் அனுமதியும் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர், டொக்டர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

மேலும், தற்காலிகமாக அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ள உணவகங்கள் மற்றும் குடி தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தினதும் குறை பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, 2 வாரங்களுக்குள் சுகாதார வைத்திய அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்த பின்னரே இவற்றுக்கான அனுமதி மீள வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

## கரும்புச் செய்கைக் காணிகளில் பெரும்போகச் செய்கைக்கு அனுமதி

அம்பாறை, நவ.08

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கரும்பு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வாக கரும்புச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் இம்முறை பெரும்போகச் செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளருமான எஸ்.எல்.எம்.பழீல் தெரிவித்தார்.

கரும்புச் செய்கையின் போது ஏற்படும் நட்டம் காரணமாக கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு மாவட்ட அரசாங்க துஷித பி.வணிகசிங்கவிடம் கரும்புச் செய்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த வேண்டுகோள் தொடர்பில் மாவட்ட அரச அதிபருக்கு பிரதி அமைச்சர் பைசல் காசீம் மற்றும் மு.கா.வின் உயர்பீட உறுப்பினர் எஸ்.எல்.எம்.பழீல் மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரியப்படுத்தினர். இதன்போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தீகவாபியில் 80 ஹெக்ரேயர், ஆலங்குளத்தில் 110 ஹெக்ரேயர், நுரைச்சோலையில் 197 ஹெக்ரேயர் உட்பட சுமார் 980 ஹெக்ரேயர் கடந்த 2 வருடங்களாக கரும்புச் செய்கை இடம்பெறவில்லை என்றும் அரச அதிபரின் கவனத்துக்கு அவர்கள் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நுரைச்சோலை விவசாய அமைப்பு, ஆலங்குளம் விவசாய நீர்ப்பாசன அமைப்பு, அம்பாறை கள்ளியன்பத்தை அமைப்பு, கல்மடு விவசாயச் சங்கம், தீகவாபி கரும்புச் செய்கையாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த கரும்புச் செய்கையாளர்கள் சுமார் ஆயிரம் பேர் நன்மை அடைவர் என்றும் அவர் கூறினார். (எ)

## மூதூரில் கடற்கொந்தளிப்பு படகுகள், தோணிகள் சேதம்



மூதூர், நவ.08


மூதூர் கடற்கரைப்பகுதியில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால், கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 படகுகளும் 3 தோணிகளும் சேதமடைந்துள்ளன.

படகுகளின் ஒவ்வொரு பாகங்களும் வெவ்வேறு இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

இதனால் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என்று உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவஇடத்துக்கு நேற்றுக் காலை பயணம் செய்த மூதூர் கடற்றொழிற் திணைக்கள அதிகாரிகள், படகுகள், தோணிகளின் இழப்பீடுகள் குறித்த தரவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

அதேவேளை இரண்டு படகுகளும் காப்புறுதி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவன அதிகாரிகளும் சேத விவரங்களைச் சேகரித்துச் சென்றனர். (எ)



திருகோணமலை, காந்திநகர் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் இணைந்து, அன்புவழிபுரம் பொது மயானத்தில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

## விரைவில் முஸ்லிம் கூட்டமைப்பு நிறைவேற்றப்பட்டது தீர்மானம்

அம்பாறை, நவ.08

முஸ்லிம் அரசியல் தலைமைகளை ஓரணியில் திரட்டி முஸ்லிம் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு கிழக்கு முஸ்லிம் பேரவை தீர்மானித்துள்ளதாக அந்தப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் முஹம்மது ஷிபான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“குறித்த பேரவையின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம், அதன் கல்முனை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு நடைபெற்ற போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முஸ்லிம் அரசியற் தலைமைகள் கருத்தொருமிப்புக்கு வரவேண்டிய அவசியம் தொடர்பிலும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதுதொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், மு.கா. தவிசாளர் பஷீர் சேகுதாவூத், மு.கா. செயலாளர் நாயகம் ஹசன் அலி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன், தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளரும் இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இந்த விவகாரம் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, தேசிய சூறாசபை ஆகியன வலியுறுத்த வேண்டும் என்று அவற்றிடம் கோரிக்கை விடுப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டது”- என்று அவர் கூறினார். (எ)

## வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு

துறைநீலாவணை, நவ. 08

ஓய்வு நிலை அதிபரும், கவிஞருமான பாவாணர் அக்கரைப் பாக்கியன் எழுதிய "மறைந்து போன அரசகுல மான்மியம்" - எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அக்கரைப்பற்று விவேகானந்தா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இரா.வடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் பிரதம அதிதியாகவும், அருட்கவிஞர் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்வர்.

கவிஞரான பாவாணர் அக்கரைப் பாக்கியன் நூற்றுக்கணக்கான மெல்லிசைப் பாடல்களை யாத்தவர்.

இப் பாடல்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-151)

# தற்காலிக சுகாதார ஊழியர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டம்

## யாழ். மாநகர சபை முன்பாக நேற்று ஆரம்பம்




யாழ். மாநகர சபையில் 7 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றி வரும் தற்காலிக சுகாதார ஊழியர் கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்றுக் காலை யாழ். மாநகர சபைக்கு முன்பாக பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபைக்கு முன்பாக நேற்றுக் காலை 6மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தின் போது தமது சுகாதாரப் பணியை நிரந்தர மாக்குதல் மற்றும் யாழ். மாநகர சபையில் உள்ளக பதவியை ஏற்படுத்தல் என இரண்டு பிரதான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

"நல்லாட்சி அரசே எமது பக்கமும் ஒருமுறை திரும்பிப்பார், வேலை வாங்கத் துடிக்கும் அதிகாரிகளே எமது நியமனத்தை மறப்பது ஏன், அதிகாரிகளே அரசியல் வாதிகளே எமது நிரந்தர நியமனத்தை மறுக்காதீர்கள், உரிமைபெற்றுத்தருவோம்என்று கூறியோரே எமது நிரந்தர நியமனத்தைப் பெற்றுத் தாருங்கள் 7 வருடங்கள் வேலை வாங்கியும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு காலம் போதாதா" போன்ற கோசங்களை எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு ஊழியர்கள் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்பு போராட்டம் தொடர்பாக வடபிராந்தி ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அற்புதம் உதயகுமார் கருத்துத் தொவிக்கையில்;-

யாழ். மாநகர சபையில் கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து 127 தற்காலிக சுகாதார ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

எமது நிரந்தர நியமனம் தொடர்பாக பலதடவைகள் யாழ். மாநகர சபையின் ஆணையாளாடமும் வடமாகாண சபையினரிடமும் பேசியிருந்தோம் அவர்கள் எமக்குப் பெற்றுத்தருவதாகக் கூறியிருந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை

கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் ஒரு அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தோம். இதன் போது யாழ். மாநகர சபையின் ஆணையாளரும் வட மாகாண சபையினரும் வருகை தந்து 2 மாதங்களில் நிரந்தர நியமனம் பெற்றுத் தருகிறோம் என்று உறுதியளித்திருந்தார்கள்

5 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரைக்கும் எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை. இதனால் இப்பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் அத்துடன் எமக்கான நியாயமான தீர்வு எட்டப்படும் வரை ஒவ்வொரு நாளும் எமது பணி நேரமான காலை6மணிதொடக்கம்பிற்பகல் ஒருமணிவரைபணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம். - என்றார் (ஐ-10)

# வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு பஸ்சேவையை அதிகரியுங்கள்

## பயணிகள் அவசர கோரிக்கை

மந்திகை, நவ.08

வடமராட்சிக் கிழக்கில் இருந்து பருத்தித்துறைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் மேலதிக பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலை, மதியம், மாலை வேளைகளில் வடமராட்சி கிழக்கில் இருந்து பருத்தித்துறைக்கும் அதேபோல் பருத்தித்துறையில் இருந்து வடமராட்சி. கிழக்குக்கு அதிக எண்ணிக்கையான பயணிகள் பயணிக்கின்றனர். அதிக எண்ணிக்கையான வான பயணிகள் பயணிப்பதால் பெரும் சன நெரிசல் பஸ்களில் ஏற்படுகின்றது.

காலை வேளையில் பருத்தித் துறை நோக்கி வரும் பஸ்ஸில் இரண்டு பஸ்களில் ஏற்றக்கூடிய பயணிகளை ஏற்றி வருவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இதைவிட ஒரு பயணி இறங்க வேண்டிய நிலையில் அவருக்கு முன்பகுதியில் நிற்போர் இறங்கி வழி விடவேண்டும். இவ்வாறு பல தரிப்பு நிலையங்களில் பயணிகள் இறங்கி ஏறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதிலும் மாணவர்களின் நிலை மேலும் மோசமானது. பல தரிப் பிடங்களில் இறங்கி ஏறி பாடசாலை செல்லும் மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்பது என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே, இப்பகுதிக்கான பஸ் சேவையை அதிகரித்து உதவுங்கள் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ -40)

# நீரேரிக்குள் பாய்ந்தது 'பட்டா'; இருவர் காயம்



பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் பயணித்த பட்டா வாகனத்தின் முன் சக்கரம் காற்றுப் போனதில் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் கடல் நீரேரிக் குள்பாய்ந்துவிபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் வல்லைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நெல்லியடி சந்தைக்கு வாழைக்குழை ஏற்றுவதற்கு வந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் 154 ஆம் கட்டை, திருமுறுகண்டிப் பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் விதுசன் (வயது -20), தங்கையா போதுராஜ் (வயது- 23) ஆகிய இருவருமே காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

சம்பவம்தொடர்பில்அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (இ-40)





2016 ஆம் ஆண்டுக்கான பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவர்களின் 12 ஆவது மாநாடு நேற்று கிறீன்கிறாஸ் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவர் ஆர்.தியாகலிங்கம் தலைமை தாங்கினார். கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண ஆளுநா றெஜினோல்ட் குரே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் அரசின் சட்டவிதிகளுகு உட்பட்டுத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவர்களின் மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

# முல்லை பாரதி இல்ல சிறாருக்கு புத்தாடை

## திருமண நாளில் வழங்கிய தம்பதியினர்



யாழ்ப்பாணம். நவ. 08

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் முல்லைத்தீவு பாரதி இல்ல பிள்ளைகளுக்கு புத்தாடைகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீபிரசன்னா கஜநிதி தம்பதிகளின் முதலாவது ஆண்டு திருமண நாள் நிறைவை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டம் பாரதி இல்லத்திலுள்ள 108 பெண் பிள்ளைகளுக்கு சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய ஆடைகள் இல்லத்தில் வைத்து சங்கத்தினுடாக அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

திருமண நாளைக் கொண்டாடும் தம்பதிகளுக்கு சங்கத்தின் சார்பிலும் இல்லப் பிள்ளைகளின் சார்பிலும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (ஐ)

# கிளிநொச்சி வலயத்துக்கு புதிதாக 86 ஆசிரியர்கள்

## 133 பேருக்கு இடமாற்றம்

கிளிநொச்சி, நவ.08

கிளிநொச்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு, 2017ஆம் ஆண்டில் 86 புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 133 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் கல்வியல் கல்லூரியில் இருந்து வெளியேறும் 53 பேர் மற்றும் 33 பட்டதாரிகள் என 86 பேருக்கு, புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, அதிபர்களாகத் தரமுயர்வு பெற்றுச் செல்லும் 25 ஆசிரியர்கள் உட்பட 133 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுக் செல்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் கீழ் உள்ள நான்கு கல்விக் கோட்டங்களிலும் 112 பாடசாலைகளில், 104 பாடசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலைகளில் பெரும் பாலானவை, ஆசிரியர் பற்றாக் குறைகளுடன் இயங்கி வருகின்றன. குறிப்பாகக் கணிதம், விஞ் ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு இதுவரை ஆசிரிய நியமனங்கள் எவையும் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

தற்போது, குறித்த பாடசாலைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆசிரியர் வெற்றிடங்களால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. அடுத்த ஆண்டில், ஓரளவு ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று அதிகாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே, ஆசிரியர் பற்றாக்குறைகள் உள்ள நிலையில் இவ்வாறு அதிகளவானோர் இடமாற்றம் பெற்றுச் செல்வதால் மேலும் 47 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை ஏற்படுகிறது என்று அவர் மேலும் கூறினார். ஐ

# பூநகரி தெளிகரைக் குளம் துரிதகதியில் புனரமைப்பு

## கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 08

கிளிநொச்சி பூநகரி தெளிகரைக் குளத்தின் புனரமைப்பு பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்று மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தயாரூபன் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தெளிகரைக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு இருந்தன.

உரிய முறையில் பணி மேற்கொள்ளப்படவில்லை. குளத்தின் அணைக்கட்டு தரமற்ற மண் கொண்டு புனரமைக்கப்படுகிறது. இதனை அதிகாரிகள் பார்வையிட்டு உரிய முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் குற்றச் சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இதனுடைய புனரமைப்புப் பணிகள் தொடர்பாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் மோற்கண்டவாறு கூறினார்.

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள குறித்த தெளிகரைக் குளமானது 3.8 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதில் குறைபாடுகள் உள்ளன என்று மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களில் எந்தவித உண்மைகளும் இல்லை. அது உரிய முறையில் புனரமைக்கப்பட்டு வருகிறது.- என்று அவர் மேலும் கூறினார். (ஐ)



வவுனியா கோயில் குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண் டேஸ்வரர் திருக்கோவிலில் இடம்பெற்ற சூரசங்காரத்தின் போது எடுக்கப்பட்ட படம். வவுனியா கோயில் குளத்தில் இடம்பெறும் சூரன் போரில் பல்வேறு விதமான சிறப்புகள் காணப்படுகின்றன. ஏனைய கோயில்களில் சூரனின் தலையை மட்டுமே திருப்ப கூடிய வகையில் உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சூரனின் முழு உடலையும் திருப்பக்கூடிய வகையிலான சூரபத்மனது உருவம் இந்தக் கோயிலில் காணப்படுவது சிறப்பாகும். வவுனியாவின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் அங்கு கூடியிருந்தனர். (ஐ)

# அடிப்படை வசதிகள் இன்றி வவுனியா மடுக்குளம் கிராமம்

வவுனியா, நவ.08

வவுனியா தெற்குப் பிரதேசத்துக்குட்பட்ட மடுக்குளம் கிராமத்துக்கு, போதிய போக்குவரத்து வசதி மற்றும் அடிப்படை வசதிகள் இல்லை.

இதனால், கிராமத்தில் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. வவுனியா - மன்னார் வீதியின் பூவரசங்குளம் சந்தியில் இருந்து இரணை இலுப்பைக் குளம் ஊடாக முல்லைத்தீவு துணுக்காய் வரை செல்லும் வீதியில், வேலங்குளம் சந்தியிலிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவில், மன்னார் மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள மடுக்குளம் கிராமத்தின் பிரதான வீதி, இன்றுவரை எந்த விதமான புனரமைப்புக்களும் இன்றி உள்ளது.

மழைக் காலங்களில் இவ் வீதியை மக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இங்குள்ள மக்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள, வவுனியாவுக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கும் ஏற்றவாறு போக்குவரத்து வசதி இல்லாத நிலை உள்ளது.

இதேவேளை, இக்கிராமத்தில் உள்ள மடுக்குளம் நவஜோதி வித்தியாலயம் போதிய அடிப்படை வசதிகள் இன்றி, ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கி வருகிறது என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் வாழும் குடும்பங்களின் அடிப்படைத் தொழிலாக விவசாயம் காணப்படுகிறது.

இந்த நிலையில் காட்டுயானைகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# வீதி திருத்தப்பணியை பார்வையிட்ட எம்.பி.



வவுனியா, நவ. 08

வவுனியா, கோயில் புதுக்குளத்தில் தனது சொந்த நிதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதித் திருத்தப்பணிகளை வன்னி நாடாளுமன்றஉறுப்பினர் கே.கே. மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டார்.

கோயில் புதுக்குளத்தில் உள்ள மக்கள், தமது கிராமத்துக்கான வீதி திருத்தப்படாமல் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து, கே.கே. மஸ்தான் தனது சொந்த நிதியில் இவ்வீதிகளை செப்பனிடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். இதன் பிரகாரம் வீதி திருத்தப் பணிகள் சரியான முறையில் இடம்பெறுகின்றனவா என்பதை நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன், அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (ஐ-100)

# சட்டவிரோத மது உற்பத்தியாளர் கைது

முல்லைத்தீவு, நவ. 08

முல்லைத்தீவு ஒட்டுசுட்டன் கொண்டை மடுப்பகுதியில் சட்டவிரோத மது உற்பத்திப் பொருள்களுடன் ஒருவர் கைது செய்ப்படுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இவர் கைது செய்யப்பட்டார் என்று மது ஒழிப்பு விசேட பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றைச் சந்தேகத்தின் அடிப்படையில் மது ஒழிப்பு விசேட பிரிவினர் சுற்றிவளைப்பு நடத்தினர்.

இதன்போதே சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர். அத்துடன் 4 லீற்றர் கசிப்பு, கோடா மற்றும் மது தயாரிக்கும் உபகரணங்கள் என்பன கைப் பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படார். சட்டவிரோத பொருள்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir
செவ்வாய்க்கிழமை 08.11.2016



# ஈழத்துப் பாடகர் சாந்தனின் சிகிச்சைக்கு 18 இலட்சம் ரூபா உதவி

ஈழத்துப் பாடகர் சாந்தனின் சிகிச்சைக்காக கனடாவின் 'பைரவி' இசைக் குழுவினர் 16 ஆயிரம் கனடிய டொலர்களை சேகரித்து வழங்கியுள்ளனர்.


கனடா ஸ்காபுறோ நகரில் அண்மையில் நடைபெற்ற நிதி சேகரிப்பு இசை நிகழ்ச்சியின் மூலம் கனடாவின் 'பைரவி' இசைக்குழுவினர் இந்தப் பெரும் தொகை நிதியை சேகரித்து வழங்கியுள்ளனர்.

ஸ்காபறோ மெற்றோபொலிட்டன் மண் டபத்தில் நடைபெற்ற மேற்படி நிதி சேகரிப்பதற்கான இசை நிகழ்ச்சிக்கு ஏராளமான ரசிகர்கள் சென்று தங்கள் ஆதரவை வழங்கி இருந்தனர்.

நிதி அன்பளிப்புக்களை வழங்கிய வர்த்தகர்கள் சார்பில் கொன்சர்வேர்ட் டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நிமால் விநாயக மூர்த்தி உரை யாற்றினார்.

இந்நிகழ்வில் பாடகர் சாந்தனின் பாடல்கள் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட் டுள்ளது.

(இ



# குருவுக்கு புகழ் தேடிக் கொடுத்த நர்த்தகி காயத்திரி





சமீபத்தில் லண்டன் லோகன் மண்டபத்தில் நடந்த பரதநாட்டிய அரங்கேற்றம் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. நாட்டிய கலாமணி அனுஷா சஜீவின் மாணவி காயத்திரி கௌரிதரன் தனது குருவுக்குப் புகழ் தேடிக் கொடுத்தார் என்று சொல்லலாம் என்றே தோன்றுகிறது.

புஸ்பாஞ்சலி, அலாரிப்புடன் ஆரம்பமாகி, ஜதீஸ்வரம் நடேச கௌத்துவம், வர்ணம் (இன்னும் என் மனமே), நிகழ்வுக்கு மகுடம் வைத்தாற் போல் நவரசநாயகி, பாட்டுக்கு நர்த்தகியின் முகபாவனை, அபிநயம், லயம், சபாஷ்! பதினான்கு வயது காயத்திரி அசத்தினார்! மகாகாளியாக மாறி தேவர்களைக் காப்பாற்ற மகிஷாசுரனை வதை செய்தது அருமை! சுட்டும் சுடர் விழிதான் கண்ணம்மா- உணர்வுகளை வெளிப்படுத்தினார். மதுரை சோழனின் மருதமலை மாமணியே அபிநயம் பிரமாதம். வம்சி கிருஷ்ணா, பவானி சங்கர், ஜலதரன், பிரணவன் பாலகிருஷ்ணன், ஹரி சிவனேசன், சிதம்பரநாதன் ஆகியோரின் பக்கவாத்தியம் நாட்டியத்துக்கு உயிரூட்டியது.



காவடிச் சிந்து, தில்லானாவுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

பி.எச். அப்துல் ஹமீத், ஆர்திபிருந்தவன், டாக்டர் கார்த்திகா நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தனர். நல்ல நாட்டிய நிகழ்ச்சியை அளித்த காயத்திரிக்கும், அவரை உருவாக்கிய அனுஷாவுக்கும் வாழ்த்துக்கள்!

கண கெங்காதரன்

# வேல்ஸில் மேடையேறிய வானம்பாடிகள் வில்லிசைக்குழு

தமிழர்களின் அடையாளமான கலைவடிவங்களில் வில்லிசைக்கு தனிஇடம் இருக்கிறது. தாயகத்தில் வில்லிசை என்ற கலைவடிவம் பெரிதும் துணை நின்றதை இலகுவில் யாரும் மறந்துவிட முடியாது.


அண்மையில் வேல்ஸ் கற்பக விநாயகர் ஆலயத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்ற வானம்பாடிகள் வில்லிசைக்குழுவின் வில்லிசை பலரையும் ரசிக்க வைத்திருக்கிறது.

ஈழத்தின் பல பாகங்களிலும் மேடையேறிய வானம்பாடி யோகராஜ் தலைமையிலான வானம்பாடிகள் வில்லிசைக்குழு 1970 களின் ஆரம்பத்திலிருந்து மக்கள் மத்தியில் மிகப்பிரபல்யம் பெற்றிருந்தது.



நாடகம், பாடல், கதை சொல்லும் திறன் மற்றும் நகைச்சுவை போன்ற அனைத்து சேர்க்கைளின் கலை வெளிப்பாட்டில் வில்லிசை இருந்த இடத்திலேயே மக்களை ஆட்கொண்டுவிடும். அதில் வெற்றியும் கண்ட வானம்பாடி யோகராஜ் அவர்களின் மறைவுக்குப்பின் நீண்டகாலத்துக்குப்பின் லண்டனில் வானம்பாடிகள் வில்லிசைக் குழுவிற்கு தலைமையேற்று அந்த கலையை எடுத்துச்செல்லும் பணியை அவரின் மகன் யோகா தினேஷ் எடுத்திருக்கிறார். பாடசாலைக்காலம் முதல் கலைவெளிப்பாட்டில் ஈடுபாடு கொண்ட யோகா தினேஷ் ஐரோப்பிய நாடுகளில் மேடை, தொலைக்காட்சி மற்றும் வானொலி, ஊடகங்கள் வாயிலாக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தவர் வில்லிசைப்பணியை எடுத்திருப்பது பலருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தமை அண்மையில் வானம்பாடிகளின் வில்லிசை நிறைவில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வேல்ஸ் கற்பகா விநாயகர் ஆலயத்தில் கல்பகா கலையரங்கில் வானம்பாடிகள் வில்லிசைக்குழுவின் வில்லிசை நிகழ்வு அரங்கேறியிருந்தது. காரைக்கால் அம்மையார் என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்த வில்லிசை சமகால நகைச்சுவைகளோடு அமைந்திருந்தது அனைவரையும் தொடர்ச்சியாக சிரிக்க வைப்பதும் ரசிக்க வைப்பதுமாகவே இருந்தது. சக கலைஞர்களாக சுப்பிரமணியம் சுதர்சன், இரத்தின சிகாமணி மற்றும் சிறீ பத்மன் ஆகியோர் கலகலப்பான நகைச்சுவைகளோடும் இசைவாகவும் வில்லிசைத்தது சிறப்பாக இருந்தது. நிகழ்வின் நிறைவில் ரசிகர்களின் பலமான கரகோசங்களொடு நிகழ்வினை சிறப்பித்த கலைஞர்கள் யோகா தினேஷ்,




சுப்பிரமணியம் சுதர்சன் மற்றும் இரத்தின சிகாமணி ஆகியோர் வேல்ஸ் கல்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-தேவா

நன்றி: 'புதினம்' சஞ்சிகை லண்டன்

திருச்சிற்றம்பலம் பரந்தாமன்.






# ஊக்கமது கைவிடேல்

இந்த நல்லாட்சி அரசாங்கத்தை ஒரு முக்கூட்டு இணக்கமாக வெளித்தரப்புக்கள் ஏற்படுத்தி வைத்துள்ளன. ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, இரா. சம்பந்தன் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட கட்சிகளுக்கு இடையிலே இந்த முக்கூட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு கட்சிகளும் - தமக்கிடையே ஆன புற முரண்பாடுகளாலேயோ அல்லது தம்முள்ளேயே ஆன அக எமுரண் பாடுகளாலேயோ குழம்பிவிடாதபடி - விட்டுப் பிரிந்துவிடாதபடி - இந்த முக்கூட்டைப் பேணுவதே இந்த வெளித்தரப்புக்களின் தலையாய கரிசனையாக இருந்து வருகின்றது. ஏனெனில் - இந்த முக்கூட்டு அரசாங்கத்தின் இருப்பே - இத்தகைய அக மற்றும் புற முரண்பாடுகளைத் தவிர்ப்பதிலேயே தங்கியிருக்கின்றது. இன்னொரு வகையில் எடுத்துக்காட்டுவ தானால் - இரா. சம்பந்தனின் கட்சி ரணிலோடும் மைத்திரிபாலவோடும் முரண்படாமல்பார்த்துக் கொள்ளவேண்டிய அதே சமநேரத்தில், அந்தக் கட்சி, தனக்குள்ளேயான அக முரண்பாடுகளால் பல வீனப்பட்டுவிடாமலும் அவர்கள் கவனிக்க வேண்டும்.

இன்றைய தருணத்தில் - அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில், வேறேதும் விடயங்களில் புடுங்குப்பாடுகள் இருப்பினும், இலங்கை தொடர்பில் எத்தகைய கொள்கை வேறுபாடும் கிடையாது. இந்த இரண்டு நாடுகளினதும் நோக்கமும், அந்த நோக்கத்தை அடைவதற்கான ஊக்கமும், அந்த ஊக்கத்தின் அடிப்படையிலான ஆக்கமும் ஒன்றே தான். இந்த இரண்டு நாடுகளுக்கும், இலங்கைத் தீவில் இன்றைய தேவை, தாம் ஏற்படுத்தியிருக்கும் இந்த முக்கூட்டு அரசாங்கத்தைப் பாதுகாத்து, அதில் குலைவுகள் ஏற்படாது பேணி, தாம் வகுத்திருக்கும் பாதையிலிருந்து விலகிவிடாமல் அதனைப் பயணிக்க வைப்பது. அதற்காக - தமக்குப் பாதகம் இல்லாத எதைச் செய்ய வேண்டும் எனினும் செய்வது. இன்னொரு வகையில் எடுத்துக்காட்டுவதானால் - இரா. சம்பந்தனின் கட்சிக்கு உள்ளேயே எழக்கூடிய முரண்பாடுகளால் தமது நோக்கத்திட்டங்கள் பாதிக்கப்படும் எனின், அவ்வாறான முரண்பாடுகளைக் களைவதற்காகத் தமது நலனிற்குக் கேடில்லாத எதனையும் செய்வது. தத்தமது நலன்களில் அவர்கள் அக்கறையாக உள்ளார்கள் - அதில் ஏதும் பிரச்சினைகள் இல்லை.

ஆனால், இங்கே பிரச்சினை என்னவென்றால் - தாம் உருவாக்கிய கூட்டரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக எதையும் செய்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பவர்களிடம், தமிழ்த் தேசத்தின் இறைமைக்கான அங்கீகாரத்தை வலியுறுத்திப் பெறுவதற்குப் பொருத்தமான தந்திரோபாயம் எதனையும் - அதே கூட்டரசாங்கத்தின் அங்கமாக இருக்கும் இரா. சம்பந்தனின் கட்சி கொண்டிருக்காதது தான். இன்னொரு வகையில் சொல்லுவதானால் - வெறும் சலுகைகளுக்கும் வசதிகளுக்கும் கைமாறாக, எந்த எல்லை வரையும் இறங்கிப் பணிவிடைகள் செய்து, இந்தக் கூட்டரசாங்கத்தைப் பாதுகாக்கத் தாம் தயாராய் இருப்பதான நம்பிக்கையை இந்த கூட்டரசாங்கத்தின் தந்தையர்களிடத்தில் இரா. சம்பந்தனின் கட்சி ஏற்படுத்தியிருப்பது தான். இன்னொரு வகையில் சொல்லுவதானால் - தமிழ்த்தேசத் தின் இறைமையும் தன்னாதிக்க உரிமையும் அங்கீகரிக்கப்படாதவிடத்து - தமது கட்சிக்குள்ளும் தமிழ்த்தேசத்திலும் குழப்பங்கள் நிகழும் என்ற அச்சத்தையும், அவ்வாறான குழப்பங்களின் நிமித்தமாக, இந்த கூட்டரசாங்கத்தைப் பராமரிப்பதிலிருந்து தாம் விலக நேரும் என்ற பயத்தையும் அந்தக் கூட்டரசாங்கத்தின் தந்தையர்களிடத்தில் இரா. சம்பந்தனின் கட்சி ஏற்படுத்தாதது இருப்பது தான்.

தமிழ்த்தேசத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றெடுக்கும் முயற்சியில் திடகாத்திரமான ஒரு கட்டத்தை நாம் இப்போது அண்மித்திருக்கின்றோம் என்று சொல்லப்படுகின்ற வேளையில் - அனேகர் எழுப்புகின்ற கேள்வி - எந்த பலத்தின் அடிப்படையில் எமது உரிமைகளை வலியுறுத்தும் அதிகார அழுத்தத்தை நாம் பிரயோகிக்க முடியும்? என்பதும், எம்மிடம் அவ்வாறான பலம் எதுவும் உள்ளதா? என்பதுமாகும்.

ஆசியாவின் தென்மையத்தில் - இந்து சமுத்திரத்தின் நடுவில் - முதன்மையான கடற் பாதையின் அருகில் அமைந்திருக்கும் ஒரு தனியான நிலப்பகுதி என்ற வகையிலும், அது ஒரு தனியான நாடாக இருப்பதன் காரணமாகவும் - இலங்கை எப்போதுமே உலக வல்லரசுகளால் கையாளப்படும் ஒரு தீவாகவே இருந்து வந்தது; இப்போதும் இருக்கின்றது; இனியும் இருக்கப் போகின்றது என்ற உண்மையை ஓர் உப்புச்சப்பில்லாத விடயமாக எவருமே உதாசீனப்படுத்திவிடக்கூடாது.

ஏனெனில் - நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் - நாம் ஏற்றாலும் ஏற்காது விட்டாலும் - இதை எழுதுகிற எனது விதியையும், இதை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவரது விதியையும் அந்த உண்மை தான் தீர்மானித்துச் செல்கின்றது. ஆகக் கடைசியாக - எம் ஒவ்வொருவரது பாவனையிலும் இருக்கும் தொலைபேசியின் கட்டணங்கள் 49.6 வீதத்தால் அதிகமாகியிருப்பது வரை - எமது விதியை அந்த உண்மையே தீர்மானித்திருக்கின்றது.

இலங்கைத் தீவைக் கையாள முனைகின்ற உலகத் தரப்புக்களுக்கு - இலங்கைத் தமிழ்த் தேசம் எப்போதுமே தேவையாக உள்ள ஓர் இன்றியமையாத தந்திரக் கருவி. இலங்கைத் தமிழர்கள் ஒவ் வொருவரும் - குறிப்பாக, வாக்குரிமை பெற்ற தமிழர்கள் ஒவ்வொருவரும் - தம் ஒவ்வொருவரது தனிப்பட்ட மூலோபாய முக்கியத்துவத்தைப் புரிந்திருக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டு, மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு வெளித் தரப்புக்கள் நகர்வுகளைச் செய்த போது, ஒவ்வொரு தனித்த தமிழ் மகனினதும் மகளினதும் வாக்குரிமையை மட்டும் நம்பியே அவர்கள் அந்த நகர்வினைச் செய்தார்கள்.

பூலோகப் பெரும் சக்திகள் தமது நலன்களுக்காகப் பயன்படுத்தும் ஒரு தந்திரோபாயக் கருவியாகத் திகழ்கின்ற தமிழ் தேசம், தனது நலனுக்காகப் பயன்படுத்த வல்ல சுய வலுவாகவும் - அதே தந்திரோபாயக் கருவி என்ற பாத்திரமே திகழ்கின்றது என்பதுவே நாம் அறிந்துணர வேண்டிய நுட்பமான உண்மையாகும்.

இன்றைய பொழுதில் எம்மிடமிருக்கும் வலு எது வெனில் - தனக்கே உரிய அரசியற் பிறப்புரிமை அங்கீகரிக்கப்படாத விடத்து - இந்த கூட்டரசாங்கக் குழந்தையின் பராமரிப்பிலிருந்துதான் விலகிவிடுவேன் என்ற அச்சத்தை, இந்த குழந்தையின் தந்தையர்களிடத்தில் தமிழ்த்தாய் ஏற்படுத்துவதுதான். அந்த வகையில் - என்னைப் பொறுத்தவரையில் - தமது 30 வருட ஆயுதப் போராட்டத்தின் எந்த ஒரு தருணத்திலும் விடுதலைப் புலிகளால் கூட ஏற்படுத்த முடியாதிருந்த அளவுக்கான பீதியை, சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எல்லோரிடத்திலும் இப்போது ஏற்படுத்த வல்ல தகுதியோடு இரா. சம்பந்தனின் கட்சி இருக்கின்றது.

தமிழ்த்தேசத்தின் பலம் அல்லது வலு அல்லது சக்தி என்ன என்ற கேள்விக்கு விடை தேடும் எத்தனங்களில் ஜோசெப் நை(Joseph Nye) என்ற அமெரிக்க அறிஞர் இப்போது பேசப்படுகின்றார். வலு தொடர்பான அவரது கோட்பாடுகளின் ஊடாக தமிழர்களின் வலு என்ன என்பது தேடப்படுகின்றது. 2009ஆம் ஆண்டு - போர் முடிவடைந்தபின்பு-பிரபாகரன் அவர்களின் இறப்பு தொடர்பாக - புதினம் இணையத் தளத்தில், நான் எழுதி சர்ச்சையாகிப்போன ஒரு கட்டுரைத் தொடரில், ஜோசெப் நை அவர்களின் கோட்பாடுகள் பற்றி குறிப்பிட்டு, தமிழ்த்தேசத்தின் அரசியலில் இனி சாதுர்யவலு என்பதன் தேவைப்பாடு குறித்து எழுதியிருந்தேன்.

வரலாறு எம்மை நிறுத்தியுள்ள இன்றைய இடத்திலிருந்து - அரசறிவியலாளர் ஜோசெப் நை சொல்லுகின்ற சாதுர்ய வலு பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

மிகச் சுருக்கமாக, மென்வலு (Soft Power) என்றால் - புறப் பாசத்தைக் காட்டியோ அல்லது அகக் கவர்ச்சியைக் காட்டியோ எமது காரியங்களை அடுத்தவர்களைக் கொண்டு சாதித்துக் கொள்வது.

மிகச் சுருக்கமாக, வன் வலு (Hard Power) என்றால் - பயமுறுத்திப் பணிய வைத்தோ அல்லது பணம் பொருளைக் கொடுத்து மயக்கியோ எமது தேவைகளை அடுத்த வர்களிடத்தில் ஈடேற்றிக் கொள்வது.

மிகச் சுருக்கமாக, சாதுர்ய வலு (Smart Power) என்றால் - பாசம் போலப் பாசாங்கு செய்தும், பயமுறுத்தலைப் பாசாங்கு இல்லாமல் செய்தும் - மென்வலு மற் றும் வன் வலு என்பனவற்றைத் தேவையான விகிதாசாரத்தில் கலந்து பிரயோகித்து - எமது காரியங்களை அடுத்தவர் களிடத்தில் பூர்த்திசெய்துகொள்வது.

சாதுர்ய வலு தொடர்பில் பேசுகின்ற ஜோசெப் நை, 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் வன் வலு மற்றும் மென் வலு கோட்பாடுகளைத்தான் அறிமுகம் செய்தார்கள் எனவும், ஆனால், 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னதான பூலோக ஓட்டத்தில் - அவையிரண்டும் ஒன்றை மற்றது பிரதியீடு செய்யமுடியாது என்று கண்டறிந்த பின்பு - இந்த சாதுர்ய வலு என்ற கோட்பாட்டைத் தான் உருவாக்கினார் என குறிப்பிடுகின்றார். - சர்வதேச உறவுகளில் வலு என்பது எது? - என்பது தொடர்பில் அவர் நிகழ்த்திய சில விரிவுரைகளிலும் நான் அமர்ந்திருந்திருக்கிறேன்.

(தொடரும்...)

**இன்றைய பொழுதில் எம்மிடமிருக்கும் வலு எது வெனில் - தனக்கே உரிய அரசியற் பிறப்புரிமை அங்கீகரிக்கப்படாத விடத்து - இந்த கூட்டரசாங்கக் குழந்தை யின் பராமரிப்பிலிருந்துதான் விலகிவிடுவேன் என்ற அச்சத்தை, இந்த குழந்தையின் தந்தையர்களிடத்தில் தமிழ்த்தாய் ஏற்படுத்துவதுதான். அந்த வகையில் - என்னைப் பொறுத்தவரையில் - தமது 30 வருட ஆயுதப் போராட்டத்தின் எந்த ஒரு தருணத்திலும் விடுதலைப் புலிகளால் கூட ஏற்படுத்த முடியாதிருந்த அளவுக்கான பீதியை, சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எல்லோரிடத்திலும் இப்போது ஏற்படுத்தவல்ல தகுதியோடு இரா. சம்பந்தனின் கட்சி இருக்கின்றது.**

# மனிதனைத் தேடும் மனிதன்

3

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*"இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*

நனவு மனமானது மனித பண்பாட்டு உலகத்தால் வனையப்படுகிறது. பண்பாட்டுக் கருத்துலகம் விரிந்துவிடும் நியமங்களையும் கட்டுப்பாடுகளையும் உள்வாங்கி உருவாக்கம் பெறுகிறது. தனி மனிதனின் சமூகப் பிரக்ஞையாகச் செயற்படுகிறது. இந்த நனவு மனமானது அடி மனதிலிருந்து ஆசைகளாக, அபிலாஷைகளாக, உந்துதல்களாக மேலெழும் இயல்புணர்ச்சிகளைத் தணிக்கை செய்து ஒடுக்கிவிடுகிறது. ஒடுக்கப்பட்ட உணர்வுகளும் ஆசைகளும் நனவிலி மனவுலகில் தஞ்சம் பெறுகின்றன. அங்கு, அவை தணிந்து அணைந்து போவதில்லை.

மாறாக, சீற்றம் கொண்ட பாம்புகளாக அவை சீறி எழுகின்றன. எப்படியாவது, எந்த வழியிலாவது, எந்த வடிவத்திலாவது அடிமனப் புற்றிலிருந்து வெளியேற அவை சதா விழைந்து கொண்டிருக்கின்றன.

கனவுகளும் ஆழ்மனதின் ஒரு வெளிப்பாடு. புதிரான படிமங்களில் புனைகதைகள் பின்னி, குறியீட்டுச் சித்திரங்களாக மனத்திரையில் கட்டவிழும் கனவுக் காட்சிகளில் அடிமன ஆசைகள் ஒளிந்து கிடக்கின்றன. நனவுலகில், நிஜவுலகில் நிறைவுகாண முடியாத ஆசைகள் கனவுலகில் நிறைவு கண்டு விடுகின்றன. கனவுலகத்தின் கதவுகளைத் திறந்துகொண்டே ஆழ் மனவுலகில் தன்னால் நுழைய முடிந்தது என்று பிராய்ட் கூறுகிறார்.

உணர்ச்சிகள் ஆசைகளாக, அடிமனத்திலிருந்து வெளியேற விளைவதும், அவை நனவு மனதில் மறுக்கப்படுவதும், மறுக்கப்பட்ட ஆசைகள் முகமூடிகள் அணிந்து, வேடங்கள் பூண்டு வேறு வழிகளில் வெளிப்பாடு காண விழைவதும், அதனால் எழும் நெருக்குவாரங்களும், முரண்பாடுகளும் உளச் சிக்கல்களாகவும், மனக்கோளாறுகளாகவும், ஆளுமைச் சிதைவுகளாகவும் விபரீத தோற்றப்பாடுகளை எடுப்பதுமாக பாலெழுச்சி என்ற 'காதல் தெய்வத்தின்' திருவிளையாடல்களை பிராய்டின் மனபகுப்பியல் விவரித்துக் கூறுகிறது. இந்த உளவியல் தத்துவம் மனித ஆழ்மனதில் அசைவியக்கத்துடன் நின்று விடாது, மனிதனின் கலை, பண்பாட்டு உலகத்துக்கும், மனித நாகரிகத்தின் தோற்றத்துக்கும், விசித்திரமான விளக்கங்களையும் கொடுக்க முனைகிறது. ஆழ்மனதில் முடங்கிக் கிடக்கும் ஆசைகள் கனவுலத்தை சிருஷ்டித்து வெளிப்பாடு காண விளைவது போல, நனவு மனமும் விழிப்பு நிலையில், கற்பனாவுலகில் பிரவேசிக்கிறது. கற்பனை வடிவில் மனிதன் விழித்துக்கொண்டு காணும் கனவுகள், புராணங்களாக, காவியங்களாக, இலக்கியங்களாக கலை வடிவம் பெறுவனவாகவும், மனிதனின் அடக்கப்பட்ட பாலுணர்வு ஆசைகள், இன்ப நுகர்ச்சி என்ற அதன் இயல்பான இலக்கிலிருந்து விடுபட்டு, கலாசிருஷ்டிப்பு என்ற உன்னத வெளிப்பாடாக உயர் நிலை மாற்றம் (Sublimation) பெறுவனவாகவும் பிராய்ட் கூறுகிறார்.

எல்லாமே அது. எல்லாவற்றிலும் அது. எல்லாவற்றையும் அசைப்பது அது. அதுவின்றி எதுவுமில்லை என்ற வகையில் பிராய்டின் உளப் பகுப்பியல் பாலுணர்ச்சிக்கு அலாதியான முக்கியத்துவம் கொடுத்து, அதன் மையத்திலிருந்தே மனிதமனம், மனித வாழ்வு, மனிதப் பண்பாடு என சகலவற்றுக்கும் விளக்கமும் அளிக்கிறது. இந்த உளவியல் தத்துவம் மனிதனை ஆசையின் பிராணியாக, இன்பத்தின் பித்தனாகச் சித்திரிக்க முனைகிறது.

மனிதன் இயற்கையின் படைப்பு என்பதால், மனித உயிர்வாழ்வு இயற்கையின் நிர்ப்பந்த சக்திகளுக்கு உட்பட்டிருப்பதால், இயல்புணர்ச்சியாக எழும் பாலெழுச்சியின் அழுத்தத்தையும் வீச்சையும், மனித மனதிலும் மனித உறவுகளிலும் அது செலுத்தும் தாக்கத்தையும் நாம் குறைவாக மதிப்பிட முடியாது. ஆயினும், பாலுணர்ச்சி உந்துதலை மனிதத்தின் சாரமாகக் கற்பித்து, மனித வாழ்விற்கும், மனித பண்பாட்டு வரலாற்றுக்கும், ஒருமுகப் பரிமாணத்தில் விளக்கமளித்துவிட முடியாது.

பிராய்ட், உணர்ச்சிமயமான மனிதனைக் கண்டார். மனிதன் இயற்கையோடு ஒன்றியிருப்பதைப் பார்த்தார். மனிதனின் பரிணாம வேர் இயற்கையில் புதைந்து கிடப்பதை அவர் அவதானித்தார். ஆயினும், அந்தக் கண்டுபிடிப்பை, நம்பமுடியாத கற்பனாவாத எல்லைகள் வரை விரிவுபடுத்தி மிகைப்படுத்தி விட்டார். பிராய்டின் தேடுதல் மனிதனின் முழுமையான முகத்தைக் காட்டவில்லை. மனிதனை ஒரு சமூகப் பிறவியாக, சமூக உறவுகளால் பிணைக்கப்பட்டு, சமூக வாழ்வியக்கத்தால் உருவாக்கப்படுபவனாக அவர் பார்க்கவில்லை.

பாலுணர்வை மையமாக வைத்து சிக்மெண்ட் பிராய்ட் சித்திரித்துக் காட்டும் ஆசை உலகத்தின் (Realm of desire) நிர்ப்பந்தங்களைப் பார்க்கிலும் மனிதனின் உயிர் வாழ்வை நிர்ணயிக்கும் இன்னோர் உலகமும் இருக்கிறது. அது தான் தேவை உலகம் (Realm of needs).

உண்பதற்கு உணவு, உடுத்துவதற்கு உடை, உறங்குவதற்கு உறைவிடம், காலூன்றி நிற்பதற்கு நிலம் என்ற வகையில் நாளாந்த சீவியத்துக்கு ஆதாரமாக எண்ணற்ற தேவைகளின் அழுத்தத்தால் மனிதப் பிறவிகள் ஒருவர் ஒருவருடன் இடர்பட்டு, முரண்டு, போராடி வாழும் ஒரு கொடுமையான உலகமாக இந்தத் தேவை உலகம் அசைகிறது.

இந்தத் தேவை உலகத்தில் பசி உணர்வு பிரதானமானது. பாலுணர்வின் உந்துதலை, விட பசி உணர்வின் உறுத்துதல் மிகவும் கொடியது. கனவிலோ, கற்பனையிலோ, மனவுலக மருட்சியிலோ பசியுணர்வின் வேட்கையைத் தணித்துவிட முடியாது. தினமும் அது என்னை வதைக்கிறது, வாட்டி எடுக்கிறது, எனது மடிக்குள் இருந்து நெருப்பாகச் சுடுகிறது. அதன் வேட்கையைத் தணிக்காது போனால் எனது வாழ்க்கையே அற்றுப் போகும். உயிரியக்கத்துக்கு அதுதான் எல்லாம். அதற்குப் பின்புதான் மற்றெல்லாம்.

> "தேவை உலகத்தில் பசி உணர்வு பிரதானமானது. பாலுணர்வின் உந்துதலை, விட பசி உணர்வின் உறுத்துதல் மிகவும் கொடியது. கனவிலோ, கற்பனையிலோ, மனவுலக மருட்சியிலோ பசியுணர்வின் வேட்கையைத் தணித்துவிட முடியாது.
>
> தினமும் அது என்னை வதைக்கிறது, வாட்டி எடுக்கிறது, எனது மடிக்குள் இருந்து நெருப்பாகச் சுடுகிறது. அதன் வேட்கையைத் தணிக்காது போனால் எனது வாழ்க்கையே அற்றுப் போகும். உயிரியக்கத்துக்கு அதுதான் எல்லாம். அதற்குப் பின்புதான் மற்றெல்லாம்."

இந்தப் பூவுலகில் உள்ள கோடானு கோடி வாய்களதும் வயிறுகளினதும் வாழ்நிலை தவிப்பாக, அன்றாட அவலமாக, பசியுணர்வு பூதாகார தோற்றப்பாடு கொள்கிறது. தவிர்க்கமுடியாத இந்தத் தேவையின் மையத்திலிருந்தே மனித முனைப்புகளின் அசைவியக்கமாக இருப்பின் சக்கரம் சுழல்கிறது.

மனிதனின் ஆணிவேர் இயற்கையில் ஆழப்பதிந்து இருக்கிறது. தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதிலிருந்து தனது சீவியத்துக்கு ஆதாரமான தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்தே மனிதன் பெற்றுக்கொள்கிறான். தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் மனிதனை இயற்கையோடு பிணைத்து வைத்திருக்கின்றன; விலங்கிட்டு வைத்திருக்கின்றன.

அனந்தகாலமாக அகற்ற முடியாத இந்தச் சங்கிலிப் பிணைப்பில் கட்டுண்டு கிடக்கும் மனிதன், இயற்கையோடு போராடி, இயற்கையின் நிர்ப்பந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற எத்தணித்து வருகிறான். ஒருபுறம் தேவையின் கொடூர நிர்ப்பந்தமும், மறுபுறம் விடுதலையின் உந்துதலுமாக மானிடம் ஒரு சிக்கலான முரண்பாட்டின் சிக்குண்டு கிடக்கிறது.

இந்தத் தேவை உலகத்தின் முரண்பாட்டுக் களத்திலிருந்தே மனிதன் பற்றிய விசாரணையைத் தொடங்குகிறார் கார்ள் மாக்ஸ்.

''எல்லாவற்றுக்கும் முதற்படியாக மனிதர்கள் வாழவேண்டும். உண்டு, உடுத்தி, உறங்கி உறவு கொண்டு



பிராய்ட்

வாழவேண்டும். வாழும் சூழ்நிலையை முதலில் உருவாக்கிக் கொண்ட பின்புதான் மனிதர்கள் வரலாற்றைப் படைக்க முடியும். தமது வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, மனிதர்கள் என்று பொருள் உற்பத்தியை ஆரம்பித்தார்களோ, என்று பொருள் உலகத்தை படைக்கத் தொடங்கினார்களோ அன்றிலிருந்தே மனித வரலாறு ஆரம்பமாகிறது.'' என்கிறார் மாக்ஸ்.

தேவை உலகத்து அழுத்தத்தால் மனிதனுக்கும் இயற்கைக்கும் மத்தியில் தொடர்ச்சியாக, முடிவில்லாத நிகழ்வுப் போக்காக நடந்துவரும் போராட்டமே உழைப்பு ஆகிறது. இந்த உழைப்பானது மானிடரின் மாபெரும் ஆக்க சக்தியாக, செயற்பாட்டு சக்தியாகப் பொருள் உலகத்தைப் படைக்கிறது.

உழைக்கும் மனிதனே இந்தப் பொருளிய உலகத்தின் சிருஷ்டி கர்த்தா. மானிடரின் பொருளிய வரலாற்றை தொடங்கி வைப்பவனும் அவனே. *(தொடரும்...)*

# குருநாகல் பள்ளிவாசல் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

குருநாகல், நவ.08

குருநாகல் மாவட்டத்தின் நிக்கவரெட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது இனந் தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நிக்கவரெட்டிய நகரத்தில் அமை ந்துள்ள ஜும்ஆ பள்ளிவாசல் மீதே இவ்வாறு பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் குரு நாகல் மாவட்டத்தின் தெலியாகொன்ன பிரதேசத்தில் கண்டி வீதியில் அமைந்துள்ள ஜும்ஆ பள்ளிவாசல் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இரண்டு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அந்தச் சம்பவத்தில் பள்ளிவாசலின் கண்ணாடிகள் சேதமடைந்திருந்தன.

இந்தநிலையில் நிக்கவரெட்டிய பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து அறிந்தவுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பணிப்புரையின் பேரில் மாகாண சபை உறுப்பினர் ரிஸ் விஜவாகர் அங்கு விரைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும், அரசின் உயர் மட்டத்தினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# 4 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை

## மண் சரிவுகள் ஏற்படும் அபாயம்

கொழும்பு, நவ.08

இலங்கைக்கு அருகில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாடு முழுவதும் சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. இதனால் 4 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு மற்றும் கற்பாறை உடைந்து விழுதல் தொடர்பில் அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. மாத்றை, காலி, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் 24 மணித்தியாலங்களுக்கு கன மழையுடன் கூடிய காலநிலை நீடிக்குமானால் குறிப்பிட்ட மாவட்டங்களில் இடர் நிலைமை மேலும் தீவிரமடையும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் சில ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கிறது.

ஜின்கங்கை மற்றும் நில்வள கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் ஏனைய ஆறுகளையும் விட அதிகரித்துள்ளது. களுகங்கையின் கீழ்ப் பகுதியிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை இன்று தொடக்கம் குறைவடையும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அனுர வர்ணசூரிய தெரிவித்துள்ளார். (ஏ)

# அடைமழையால் பாதிக்கப்பட்ட புத்தளம் உப்பு ஏற்றுமதியாளர்

புத்தளம், நவ.08

புத்தளம் உட்பட பல பிரதேசங்களில் பெய்த அடை மழை காரணமாக புத்தளம் உப்பு ஏற்றுமதியாளர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அடை மழை காரணமாக உப்பு உற்பத்தி நடவடிக்கை தடைப்பட்டுள்ளதாக கைத்தொழிலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆனகுத்துவ, சேவன்திவ், மனதில், சோல்டன், பாலாவி உட்பட பல பகுதிகளில் இவ்வாறு உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## போலிக் கடவுச்சீட்டுடன் ஈரானியப் பிரஜை கைது

கொழும்பு, நவ.08

போலியான கடவுச் சீட்டுடன் ஈரானிய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அதிகாலை வந்திறங்கிய குறித்த நபரை விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஈரானியப் பிரஜையிடம் இருந்த பிரான்ஸ் நாட்டுக் கடவுச் சீட்டையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். குறித்த சந்தேக நபர் துருக்கியில் இருந்து இலங்கை வந்துள்ளார் என்று அவரிடம் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து ஜேர்மனியின் பிராங்பேர்ட் சென்று அங்கிருந்து பிரிட்டனுக்குச் செல்வதற்கு குறித்த ஈரானிய பிரஜை திட்டமிட்டிருந்தார் என்று விசாரணையின் போது தெரிய வந்ததாக குடி வரவு- குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ)

## பீடி, சுருட்டு 'பக்கெற்'களிலும் எச்சரிக்கை படங்கள் பிரசுரம்!

கொழும்பு, நவ.08

சிகரெட் பக்கெற்றுக்களில் காணப்படும் உருவப்பட எச்சரிக்கையை, பீடி மற்றும் சுருட்டுப் பக்கெற்றுக்களிலும் வெளியிடுவது தொடர்பில், சுகாதார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

பல நோய்களுக்கு வித்திடும் புகைப் பழக்கத்தை இல்லாது ஒழிப்பதற்காக, உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனையின் பிரகாரம், சிகரெட் பக்கெற்றுக்களில், உருவப்பட எச்சரிக்கைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பீடி மற்றும் சுருட்டு ஆகியவற்றுக்கு, இவ்வாறான உருவப்பட எச்சரிக்கைகள் பிரசுரிக்கப்படவில்லை. இந்தநிலையிலேயே, இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோரின் ஆலோசனைகளுக்கமைய, புகையிலை உற்பத்திகளுக்கான வரி, 90 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஒரு சிகரெட்டின் விலை, 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புகைப் பொருள்களின் விலையை அதிகரிப்பதன் ஊடாக, அதன் பாவனையாளர்களின் எண்ணிக்கைகளை 4-5 சதவீதமாகக் குறைப்பதே, அரசின் நோக்கமாகும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். இந்த நிலையில், பீடி சுற்றப்பட்டுள்ள இலையின் இறக்குமதிக்கான வரி, இரண்டாயிரம் முதல் மூவாயிரம் ரூபா வரை அதிகரிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில், பீடி மற்றும் சுருட்டுக்கான உருவப்பட எச்சரிக்கையும் விடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ஏ)

# தினசரி ராசி பலன் 08.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.45 - 11.45 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 3.00 - 4.30 |
| குளிகன் | : 12.00 - 1.30 |
| எமகண்டம் | : 9.00 - 10.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகவர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும் நன்நாள்.

**ரிஷபம்** : கோபம் - அசுர குணம் மிளிரும் அன்பு குறையும் அனைவரிடத்திலும் அமைதியுடன் விளங்க நலம் நல்கும் நன்னாள்.

**மிதுனம்** : ஆதரவு - இன்று உறவினர்களாலும் , அந்நியர்களாலும் ஆதரவு கிடைக்கும் நன்நாள்.

**கடகம்** : வரவு -இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் அமைதியைக் கடைபிடித்தால் எதிர்பாராத வகையில் வரவுகள் கிடைக்கும்.
சந்திராஷ்டமம்: பூசம் , ஆயில்யம்

**சிம்மம்** : ஆக்கம் - இன்று தங்களுடைய செயலில் நல்முன்னேற்றம் தோன்றும் நன்நாள்.

**கன்னி** : மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்றுக் குறைவாக இருக்கும் நன்நாள்.

**துலாம்**: போட்டி - இன்று தொழில் முறையில் போட்டிகள் நிலவும் நன்நாள்.

**விருச்சிகம்**: நன்மை - நெடுநாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்நாள்.

**தனுசு**: உறுதி - இன்று எடுக்கும் செயல்களில் தெளிவுடன் செயல்படும் நன்நாள்

**மகரம்**: சுகம் - இன்று எதிர்பாராத மகிழ்ச்சி மனதில் நிறையும் நன்நாள்.

**கும்பம்**: செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நன்நாள்

**மீனம்**: வாழ்வு - இன்று எண்ணங்கள் யாவும் நிறைவேறும் நன்நாள்.

# பிரான்ஸில் படுகொலை முயற்சி; இலங்கைத் தமிழர் மூவர் கைது

பரிஸ், நவ.08

பிரான்ஸில் படுகொலை முயற்சியில் ஈடுபட்ட இலங்கைத் தமிழர் மூவரை அந்தநாட்டு பொலிஸார் நேற்று முன்தினம் அதிரடியாகக் கைது செய்துள்ளனர் என்று பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி லாச்சப்பல் என்ற பகுதிக்கு அருகிலிருந்து 18 வயதான இளைஞன் ஒருவர் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிலையில் அந்த நாட்டுப் பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

தலை உள்ளிட்ட பகுதிகளில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த படுகொலை முயற்சியின் விசாரணைகளை பரிஸ் இரண்டாவது பிரிவின் சட்டவியல் பொலிஸார் மிகவும் தீவிரமாக நடத்தி வந்தனர்.

இந்தநிலையில், அந்த நாட்டு பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் மூலம் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரான்ஸ் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அந்தநாட்டு பொலிஸார்,

"இந்தத் தாக்குதல் சம்பவம் தமிழ்க் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற பழிவாங்கல் மோதல்" என்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சம்பவ தினத்தன்று அங்கு இருந்தனர் என்று ஒப்புக் கொண்டுள்ள நிலையில், ஒருவர் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறார் என்று அந்த நாட்டுப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஏ)

## மற்றும் ஒருதொகுதி ஈழ அகதிகள் தமிழகத்திலிருந்து தாயகத்துக்கு

கொழும்பு, நவ.08


தமிழகத்திலுள்ள மற்றும் ஒரு தொகுதி ஈழத்தமிழ் அகதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி தாயகம் திரும்பவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரக அலுவலகம் முன்னெடுக்கும் சுயவிருப்பின் பேரில் நாடு திரும்புவோருக்கு வசதியளிக்கும் திட்டத்தின் கீழ் 20 ஈழ அகதிகள் நாடு திரும்பவுள்ளனர்.

10 குடும்பங்களைச் சேர்ந்த 20 அகதிகள் சென்னையில் இருந்து ஸ்ரீலங்கன் எயார் லயன்ஸ் விமானம் மூலம் கொழும்பை வந்தடைவார்கள் என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி கூறியுள்ளார்.

அவர்களில் 10 பெண்களும் அடங்கியுள்ளனர் என்றும் அவர்கள் சொந்த இடங்களான வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்றும் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஏ)

# ஆபாசங்கள் மூலம் மாணவரைத் துர்நடத்தையில் ஈடுபடுத்தத் தூண்டும் இலத்திரனியல் சாதனங்கள்



## பெற்றோரைக் கண்காணிக்க கோருகின்றார் முதல்வர் விக்கி

ஆபாசங்கள் மூலம் மாணவரைத் துர்நடத்தையில் ஈடுபடுத் தத் தூண்டும் வகையில் அவ் விடயத்தில் இலத்திரனியல் சாதனங்கள் காட்டுகின்ற கரிசனை எம்மை மனவேதனை அடையச் செய்கின்றது.- எனக் கவலை தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை குடத்தனை, கிறிஸ்து நற்தூது பணியக மண்டபத்தில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை நடத்திய முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

அமெரிக்கன் மிஷன் திருச்சபையுடன் நான் பல வருடங்களுக்கு முன்னரே தொடர்பு வைத்திருந்தேன். மிஷனில் பிரிவுகள் வரமுன்னரே மிஷன் அருட் தந்தையர் சார்பில் வழக்குகளில் சட்டத்தரணியாகக் கொழும்பில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றேன். அப்பொழுது வெள்ளவத்தை Fussels Laney இஸ் உங்கள் காரியாலயம் இருந்தது. ஆகவே, அருட் தந்தையார் அழைத்த போது அமெரிக்கன் மிஷனுடன் சம்பந்தப்பட்டதாலும் உங்கள்பணியகம் குடத்தனையில் அமைந்திருப்பதாலும் இப் பகுதிக்கு வர ஆவல் கொண்டிருந்ததாலும் உங்கள் அன்பான அழைப்பை ஏற்றுக் கொண்டேன்.

### பல்சமய சம்மேளனம்

நான் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் 1958ஆம் ஆண்டில் சமய ஒப்பீடு பற்றிய ஒரு பரிசிலைப் பெற்றேன். அந்தப் பரிசிலைப் பெற நான்கு சமயங்கள் தொடர்பான அறிவு இருக்க வேண்டும். குறிப்பிட்ட சில விடயங்களில் ஒப்பீட்டு முறையில் பதில் அளிக்கவும் தெரிந்திருக்க வேண்டியிருந்தது. இதனால் பல் சமய அறிவை அப்பொழுதிருந்தே நான் பெறக்கூடியதாக இருந்தது. ஏற்கனவே இவ் விடயத்தில் எனக்கு அக்கறை இருந்தது. 1965ஆம் ஆண்டில் பல்சமய சம்மேளனம் ஒன்று உருவானபோது அதன் ஆரம்பகால உறுப்பினராக நான் இருந்தேன்.

பின்னர் உபசெயலாளராகவும் நியமிக்கப்பட்டேன். குறித்த பல் சமய சம்மேளனம் பற்றிய சட்டம் 1970ஆம் ஆண்டின் 13ஆவது இலக்கச் சட்டமாய் இன்றும் எமது சட்ட வாக்கங்களில் இருந்து வரு கின்றது. ஆனால், நாற்பது ஆரம்ப உறுப்பினர்களிடையே உயிரோடு இருக்கும் ஒரேயொருவர் நான் மட்டுமே என்று நம்புகின்றேன்.

ஆகவே, பல்சமய அறிவு பெறல், பல சமயிகளுடனும் உறவாடல் போன்றவை என்னால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நற்செயல்கள் என்று சொல்லலாம். அந்த விதத்தில் உங்கள் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு இறைவனுக்கு முதற் கண் என் நன்றியைத் தெரிவிக் கின்றேன்.

### சமய நல்லுறவு

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கல்வியறிவில் சிறந்து விளங்குகின்றார்கள். காரணம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அமெரிக்காவைச் சேர்ந்ததிருச்சபைகள்கல்வியோடு இணைத்து புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தை தெற்காசியப் பிரதேசங்களில் பரப்பும் நோக்குடன் இலங்கையின் வடபகுதிக்கு விஜயம் செய்து ஆங்காங்கே பல பாடசாலைகளையும் கல்விக் கூடங்களையும் நிர்மாணித்தமையே. அவர்கள் ஏற்றிவிட்ட கல்விச் சுடரே இன்று பிரகாசமாக ஒளிர்கின்றது. அவர்கள் மாணவர்களுக்கான ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர். அதன் விளைவாக இன்று பல அறிஞர்களும் கல்விமான்களும் அரசியல் தலைவர்களும் உருவாகியுள்ளார்கள். திருச்சபைகளின் செயற்பாடுகளுக்கு ஒப்பாக இந்து போர்ட் இராஜரட்ணம் போன்றவர்களின் முயற்சிகளின் மூலம் தமிழ் வித்தியாலய கல்விக் கூடங்களும் சமய அறிவூட்டல் நிலையங்களும் உருவாகியதன் பயனாக எமது அறி ஞர்கள் பலர் தாய் மொழியாம் தமிழ் மொழியுடன் ஆங்கிலக் கல்வி, சமய அறிவு என்பவற்றை நிறைவாகப் பெற்றுக் கொண்டு கற்றறிந்த ஒரு குழாமாக உலா வருவது எமக்கு மகிழ்வளிக்கின் றது. எமது வடமாகாணத்தில் சமய ரீதியாக இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் சமய நல்லுறவு பேணப்பட்டு வருகின்றது என்பது வெள்ளிடை மலை.

அன்று திருச்சபைகளும் மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் எமது மாணவர்களின் கல்வி, அதனோடிணைந்த சமூகப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்திருக்காவிட்டால் நாமும் கல்வி கேள்விகளில் மிகவும் பின்தங்கிய ஒரு சமுதாயக் கட்டமைப்பின் கீழ் தள்ளப்பட்டிருப்போமோ என்ற ஐயம் தோன்ற வாய்ப்பிருந்தது. எம்மவர்கள் தாம் பெற்ற கல்வியைத் தமது உடன்பிறப்புக்களுக்கும் நண்பர்களுக்கும் சமூகத்திற்கும் வழங்குவதற்கும் அவர்களுக்கு வழி காட்டுவதற்கும் பயன்படுத்தியமையின் விளைவே வடமாகாணத்தில் 85 வீதத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியறிவைப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

### யுத்தப் பாதிப்பால் ஏற்பட்ட நிலைமை

துரதிர்ஷ்ட வசமாக இப்பகுதிகளில் இடம்பெற்ற பாரிய யுத்த நடவடிக்கைகள், அதனோடிணைந்த தாக்கங்கள் எமது இளைய சமூகத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. கல்வி கேள்வியறிவுகளிலும் அவர்கள் பின்னிற்க வேண்டிய ஒரு நிலையும் ஏற்பட்டதென்றே தெரிகின்றது. பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். பாடசாலைப் புத்தகங்களுடன் கண் விழித்துக் கற்க வேண்டிய நேரத்தில் துப்பாக்கிகளுடன் எல்லைப்புறக் கிராமங்களில் கண்விழித்து எம்மைக்காவல் செய்த எம் இளைஞர்கள் இன்று அங்கவீனர்களாக - அல்லல்படுபவர்களாக - நினைவு கூரப்பட வேண்டியவர்களாக - ஆதரவற்ற நிலையில் வாழ்ந்து வருவது ஒரு துர்ப்பாக்கிய நிலையே.

இன்றைய சமூகத்தை, இளைஞர் யுவதிகளை, மாணவர்களை எவ்வாறு காப்பாற்றி ஒரு பண்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது என் பது பற்றியே நாம் தீவிரமாகச் சிந்தித்து வருகின்றோம். மேடைகளில் ஏறிநின்று வீரமுழக்கங்கள் செய்வதோ, ஆளையாள் திட்டித் தீர்ப்பதோ இக்கால கட்டத்துக்கு அவசியமற்றவை. புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள், பணம் படைத்தவர்கள், அறிவு சார் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எவ்வாறு அமெரிக்க தென்னிந்திய திருச்சபைகள் உங் கள் சமூகத்தை கல்வியில் முன்னேற்றங்காணப் பாடுபட்டனவோ அந்த வகையில் எம் மக்கள் யாவரையும் மீண்டும் ஒரு முறை கல்வி கேள்வி நடவடிக்கைகளில் உயர்ந்தவர்களாக, பண்பட்ட ஒரு சமூகமாக மாற்றுவதற்கு என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்ற முடியும், பின்பற்ற வேண்டும் என்பவை பற்றி ஆரய்ந்து நாம் யாவரும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய ஒரு கட்டத்தில் நாம் இருக்கின்றோம். ஒருவரையொருவர் குறைகாண்பதற்கோ அல்லது தூற்றித் திரிவதற்கோ செலவிடுகின்ற நேரங்களை இவ்வாறான முன்னேற்றகரமான பணிகளை ஆற்றுவதற்கு செலவிடுவதன் மூலம் வருங்கால சந்ததியினரை நாம் சுபீட்சமுடைய ஓர் இனமாக மாற்ற முடியும் என்பது எனது அசையா நம்பிக்கை.

### மறக்கப்படும் வாக்குறுகள்

இன்று தேர்தலில் வென்ற ஒருவர் அடுத்த தேர்தலுக்கே தன்னை ஆயத்தப்படுத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். தேர்தல் எக்காலப் பகுதிக்காக நடத்தப்பட்டதோ அந்தக் காலப் பகுதியில் தாம் செய்வதாகக் கொடுத்த வாக்குறுதிகள், உறுதிமொழிகள் யாவையும் மறந்து விடப்படுகின்றன. அந்த நிலைமை மாறி மக்களுக்காக நாம் இன்று என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணம் எம் எல்லோர் உள்ளத்திலும் பரிணமிக்க வேண்டும்.

உங்களைப் பொறுத்த வரையில் இளம் சமுதாயத்தை நல்வழிப் படுத்தி நடத்திக் கொண்டு போவது ஒரு முக்கியமான விடயம் என்று நான் நம்புகின்றேன். அந்த வகையில் முன்னெடுப்புக்கள் பலவழிகளில் கொண்டு செல்லப்படலாம். இன்று மாணவர்கள் வாசிப்புப்பழக்கங்களை முற்றாகத் துறந்துவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஒவ்வொரு வீட்டிலும் நூற்றுக் கணக்கான பெறுமதிமிக்க பயன் தரக் கூடிய புத்தகங்கள் நிரம்பியிருந்தன. மாணவ, மாணவியர் தமது ஓய்வு நேரங்களில் கற்றல் அல்லது வாசிப்பு வேலைகளிலேயே கூடுதலாக ஈடுபட்டார்கள்.

### இணைய வலையமைப்பு ஏற்படுத்தியுள்ள பாதிப்பு

இன்று நிலைமைகள் அவ்வாறு இல்லை. புத்தகங்கள் இருக்க வேண்டிய வீடுகளில் செல்போன்கள் அடுக்கப்படுகின்றன. கற்றலுக்கு செலவழிக்க வேண்டிய நேரத்துணுக்குகள் முகப்புத்தகங்களில் செலவீடு செய்யப்படுகின்றன. வயது வந்தவர்கள் கூட கூச்சப்படுகின்ற பல விடயங்கள் இன்று இணைய வலைப்பின்னல்களில் வர்ணப் படங்களுடன் கூடிய செயன் முறை விளக்கங்களுடன் அமைந்திருப்பது சமூகத்தை வேண்டும் என்றே அடுத்துக் கெடுப்பதற்கான ஒரு முன் முயற்சியாகவே தென்படுகின்றது.

பாலியற் கல்வி என்பது பாடப் புத்தகங்களில் சேர்க்கப்படக் கூடிய ஒரு விடயமாக ஆராயப்படும் இவ் வேளையில் அவற்றை ஆபாசங்களாக மாற்றி மாணவர்களின் இச்சைகளைத் தூண்டுவதற்கும் அதன் வழி அவர்களைத் துர்நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கும் இந்த இலத்திரனியல் சாதனங்கள் காட்டுகின்ற கரிசனைகள் எம்மை மன வேதனை அடையச் செய்கின்றன.

இன்று வட பகுதியில் அரங்கேற்றப்படுகின்ற வாள்வெட்டு கலாசாரம், கொலை, களவு, பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவற்றுக்கு மூல காரணங்கள் இவ்வாறான நவீன சாதனங்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. இந்தத் துர்ப்பழக்க வழக்கங்களை அரங்கேற்றுவது எமது இளைஞர், யுவதிகளே என எண்ணுகின்றபோது தவறு எங்கள் மீது, அதாவது பெற்றோர்கள் மீதுதான் இருப்பதாகத் தெரிகின்றது. எமது கவனக்குறைவும் ஒரு முக்கிய காரணமாக அமையலாம்.


நாட்டைத் திருத்துவதற்கு முன்னர் வீட்டைத்திருத்த ஒவ்வொரு குடிமகனும் முன் வர வேண்டும். நாட்டைத் திருத்துவது கால விரயத்துடன் கூடிய கடினமான பணியாகக் காணப்படுகின்ற போதிலும், வீட்டைத் திருத்துவது விரைந்து முடிக்கக்கூடிய வேலையாகவே அமைகின்றது. பாடசாலை செல்லும் எமது இளைஞர், யுவதிகள் என்ன செய்கின்றார்கள்? எங்கு செல்கின்றார்கள்? எவருடன் சேர்கின்றார்கள் போன்ற விடயங்கள் இனியாவது கண் காணிக்கப்படல் வேண்டும். அவர் களின் பாடப்புத்தகங்களும் குறிப்புக் கொப்பிகளும் புத்தகப்பைகளும் தினமும் பார்வையிடப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளைகளின் ஒழுக்கங்கள், கற்றல் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் கூர்ந்து அவதானிக்கப் படுகின்ற போது வீடு முன்னேறும்; இவ்வாறு வீடுகள் முன்னேற நாடு முன்னேறும். எனவே, தேவையற்ற உள்ளீடுகள் நுழைய முடியாத வாறு கட்டுக்கோப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். இளம் செடிகள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை நாம் மறத்தலாகாது. அவை மரமாகியதும் எமது பங்கு குறைந்துபோகின்றது. ஆனால், அது வரையில் பெற்றார்கள் தான் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பற்றி பரிசீலித்துப் பார்க்க வேண்டும். கவனமாக இருக்க வேண்டும். ஒருமுறை என் மகனுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டாம் என்று நான் தடை விதித்த ஒருவர் இன்று பாரிய நெருக்கடியில் அகப்பட்டுள்ளார். வளரும் பயிரை அன்று முளையிலேயே கண்டு கொண் டேன்.

அவசர பணக்காரர்களாக மாற வேண்டும் என்பதற்காக கஞ்சா கடத்தல், கள்ளமண் ஏற்றி விற்றல், அங்கீகாரமற்ற களவுத் தொழில்களை மேற்கொள்ளல் போன்றவற்றில் எமது இளைஞர்கள் ஈடுபடுகின்றார்கள். இவற்றைப் பெற்றாராகிய நாமே தடுக்க முற்பட வேண்டும். பிள்ளைகளுக்கு நாமே களவை கெட்ட பழக்க வழக்கங்களை வலிந்து பழக்குபவர்களாக அமையக்கூடாது.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

# பிரிட்டன் பிரதமருடன் 40 பேர் இந்தியா வருகை

*மின்சக்தி ஆராய்ச்சி நிலையம் அமைக்க இரு நாடுகளும் ஒப்புதல்*



டில்லி, நவ.08

சூரிய மின் சக்தி ஆராய்ச்சி நிலையம் அமைப்பது தொடர்பில் இந்தியா-பிரிட்டன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒத்துழைப்புக்கு 'மேக் இன் இந்தியா' முக்கிய பங்கு வகிக்கிறது.

பிரிட்டன் பிரதமர் தெரசாமே 3 நாள் பயணமாக நேற்று முன்தினம் இரவு டில்லியைச் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவருடன் பிரிட்டன் தொழில் அதிபர்கள் சுமார் 40 பேர் வந்தனர். கடந்த ஜூலை மாதம் பதவியேற்றுக் கொண்ட பின்னர் தெரசாமே ஐரோப்பாக் கண்டத்தைத் தாண்டி வெளிநாட்டுப்பயணம் மேற்கொண்டமை இதுவே முதல் முறையாகும்.

தெரசாமே முதலாவது நிகழ்ச்சியாக டில்லியில் நேற்றுக் காலைஇந்தியா-பிரிட்டன் தொழில்நுட்ப மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று பேசியவை வருமாவை:-

"ஐரோப்பாக் கண்டத்தைத் தாண்டி முதல் வெளிநாட்டுப் பயணமாக தெரசாமே இந்தியாவைத் தெரிவு செய்தமை பெருமை அளிக்கிறது.

இந்தியா-பிரிட்டன் இடையேயான இருதரப்பு வர்த்தகம் நீடிக்கும். கடந்த 5 ஆண்டுகளில் இருப்பதுபோன்ற நிலைமை தொடரும். பிரிட்டனில் முதலீடு செய்யும் 3 ஆவது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

அறிவியல் உலகமயமானது. தொழில்நுட்பம் கண்டிப்பாக உள்ளூராக இருக்க வேண்டும். சர்வதேச சவால்களை எதிர்கொள்ள இரு நாடுகளும் தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும்.

இந்தியா-பிரிட்டன் இடையேயான சூரிய மின்சக்தி ஆராய்ச்சி மையத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகள் இடையேயான ஒத்துழைப்புக்கு 'மேக் இன் இந்தியா' முக்கிய பங்கு வகிக்கிறது.

இராணுவம் உட்பட பல்வேறு துறைகளில் அந்நிய முதலீடு மூலம் பிரிட்டன் பயன் அடையும்." இவ்வாறு அவர் கூறினார்.(ஏ)

# 300 பயங்கரவாதிகள் காஷ்மீரில் ஊடுருவல்!



ஸ்ரீநகர், நவ.08

காஷ்மீரில் 300 பயங்கரவாதிகள் பதுங்கி உள்ளனர் என்றும் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதி வழியாக ஊடுருவிய அவர்கள் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளனர் என்றும் காஷ்மீர் மாநில டிஜிபி கே.ராஜேந்திரா தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் முதல்வர் மெகபூபா முப்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"எல்லையில் தொடர்ந்து நடைபெறும் ஊடுருவலே, காஷ்மீரில் நிலவும் பதற்ற நிலைக்குக் காரணம். பர்கன் வானி கொல்லப்பட்டதன் விளைவாக 4 மாதங்களாக நிலவி வரும் பதற்ற நிலையால் காஷ்மீரின் நிலை மிகவும் பலவீனமடைந்துள்ளது.

தற்போது 250-300 பயங்கரவாதிகள் காஷ்மீருக்குள் ஊடுருவி தயார் நிலையில் உள்ளனர். இதனால் அடுத்த 2-3 மாதங்களுக்கு நாம் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து திட்டம் வகுக்க வேண்டும்.


தற்போது நடைபெற்றுவரும் போராட்டங்களால் சுமார் 70 கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. 53-70 கட்டடங்கள் மொத்தமாகச் சேதப்பட்டுள்ளன. சாதாரண நிலையைத் திருப்பிக் கொண்டு வருவதற்கு படைகள் முக்கியத்துவம் அளித்து வருகின்றன"- என்றார். (ஏ)

## இந்தியாவில் 2 ஆயிரம் ரூபா தாள்கள் விரைவில்!

டில்லி, நவ.08

இந்தியாவில் 2 ஆயிரம் ரூபா தாள்கள் விரைவில் புழக்கத்தில் வரவுள்ளன. அதுமட்டுமல்லாமல் சமூக வலைத்தளங்களில் 2 ஆயிரம் ரூபா தாள்களின் மாதிரி புகைப்படங்கள் பரவி வருகின்றன. இந்த தாள்கள் மைசூர் ஆர்.பி.ஐ. அச்சகத்தில் அச்சாகிவிட்டன எனவும் விரைவில் மக்களின் புழக்கத்துக்கு வரும் என் றும் கூறப்படுகிறது.

தற்போது இருக்கும் ரூபாய் தாள்களை விட முற்றிலும் வேறுவிதமாக இருக்கும் இந்தத் தாள்களில் காந்தியின் படமும் இல்லை. இதுகுறித்த எந்த அறிவிப்பையும் ஆர்.பி.ஐ. இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)




*இந்தியத் தலைநகர் டில்லியில் நச்சுக்காற்று அச்சம் அனைவரையும் ஆட்கொண்டிருக்கிறது. காற்றின் தரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, டில்லியில் காற்றின் தரம், 999 என்ற அளவில் பதிவாகியுள்ளது. இந்த நிலையில், டில்லியில் தனியார் பாடசாலை மாணவர்கள், அவர்களது பெற்றோர் இணைந்து விழிப்புணர்வுப் பேரணி ஒன்றை நடத்தினார்கள். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக் கோரி அவர்கள் முழக்கங்கள், இசைகளுடன் இந்தப் பேரணியை நடத்தினார்கள். டில்லி காற்று மாசுக்குத் தீர்வு காண 25 விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அவசரகால நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டு நேற்றுக்காலை முதல் நடைமுறைக்கு வந்தன. (ஏ)*

## காஜிபூருக்கு செல்கிறார் மோடி

காஜிபூர், நவ.08

அடிக்கல்களை நடும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திரமோடி எதிர்வரும் 14 ஆம் திகதி காஜிபூர் நகருக்கு பயணம் மேற்கொள்கிறார்.

உத்தரப்பிரதேசத்தில் ரயில்வே பாதை ஒன்று அமைத்தல் மற்றும் கங்கை ஆற்றின் மீது பாலம் ஒன்று அமைத்தல் ஆகியவற்றுக்கான அடிக்கல்களை நடும் விழாவில் கலந்து கொள்வதற்காக மோடி நவம்பர் காஜிபூர் நகருக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தில் அவர் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார் என்று பாரதீய ஜனதாவின் மாவட்ட ஊடகப் பொறுப்பு பதவி வகிக்கும் சசிகாந்த் சர்மா தெரிவித்துள்ளார். (ஏ)

# மதுவுக்கு எதிரான இயக்கம் ஆரம்பிக்கவுள்ளார் ஹசாரே



ஊழலுக்கு எதிராகப் போராடி வரும் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே, மதுவின் அச்சுறுத்தலுக்கு எதிராக இயக்கத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

புனேவில் அரசு சாரா தொண்டு நிறுவன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"மது, குடும்பத்தையும் பெண்களையும் அழிக்கிறது. மதுவின் கொடுமையால் உண்மையில் பாதிக்கப்படுவது அவர்கள்தான்.

பூரண மதுவிலக்கு கொண்டு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்குப் பின்னர், மதுவுக்கு எதிராகத்தான் எனது அடுத்த போராட்டம் இருக்கும். மது விற்பனை மற்றும் நுகர்வுக்கு எதிராகக் கடுமையான சட்டம் கொண்டுவரப் போராடுவோம். மதுவுக்கு எதிரான வரைவு அறிக்கை ஏற்கனவே தயாராகி உள்ளது. இது முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸிடம் வழங்கப்படும்"-என்றார். (ஏ)

# இந்தியா-ஜப்பான் இடையே விரைவில் அணுசக்தி ஒப்பந்தம்

டில்லி, நவ.08

இந்தியா-ஜப்பான் இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் கைச்சாத்தாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஜப்பான் பிரதமர் ஜின்சோ அபே இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது வளர்ச்சித் திட்டங்களுக்கான அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகவில்லை.

இந்தநிலையில், ஜப்பானுக்கு பிரதமர் மோடி எதிர்வரும் 11, 12 ஆகிய திகதிகளில் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அப்போது, இந்திய- ஜப்பான் அணுசக்தி ஒப்பந்தம் எதிர்வரும் 11 ஆம் திகதி கைச்சாத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஜப்பான் நாட்டுப் பத்திரிகையில் வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-


"இந்திய பிரதமர் மோடியின் டோக்கியோ பயணத்தின்போது இந்தியா-ஜப்பான் இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

இதன்படி, இந்தியாவுக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை ஜப்பான் வழங்கும். அதே வேளையில், இந்தியா அணு குண்டுச் சோதனை நடத்தினால் இரு தரப்பு ஒத்துழைப்பு நிறுத்திக் கொள்ளப்படும் என்று இந்தியாவும், ஜப்பானும் ஒப்புக்கொண்டுள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் பட்சத்தில், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலேயே ஜப்பானுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட முதல் நாடாக இந்தியா விளங்கும்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் நல்லுறவு ஏற்படும். மேலும் அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் அணு மின் நிலையங்களை ஆரம் பிப்பதும் சுலபமாகும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## செயற்கைச் சூரியனை உருவாக்கி சீன விஞ்ஞானிகள் சாதனை!



பீஜிங், நவ.08

சீன நாட்டு விஞ்ஞானிகள் செயற்கை சூரியனை உருவாக்கி 60 நொடிகள் வரை ஒளிர வைத்துள்ளனர். இது அறிவியல் உலகத்தையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் சீனாவின் தலை சிறந்த அறிவியல் விஞ்ஞானிகள் குழு இந்தச் சாதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது.

இதற்கென்று ஒரு கட்டமைப்பை உருவாக்கி அதன் வாயிலாக 50 மில்லியன் கெல்வின்ஸ் வெப்பத்தை அதிகரிக்கச் செய்தனர். அதாவது சூரியனின் மையப் பாகத்தில் இருக்கும் வெப்பத்தை விடவும் 3 மடங்கு இது அதிகம் என்று கூறப்படுகிறது. சூரியனின் மையப் பகுதியில் இருக்கும் வெப்பத்தின் அளவு 15 மில்லியன் கெல்வின்ஸ் என்று அறிவியல் ஆய்வாளர்களின் கணக்கிட்டுள்ளனர்.

சீன விஞ்ஞானிகள் உருவாக்கிய வெப்பமானது நடுத்தர அளவிலான வெப்பாற்றல் என்றும் கூறப்படுகிறது.

பிளாஸ்மா இயற்பியலில் தலை சிறந்த விஞ்ஞானிகள் குழு பிளாஸ்மா எனப்படும் சூரியனின் மைய வெப்பத்தை உருவாக்கி இந்தச் சோதனை முயற்சியை மேற்கொண்டுள்ளது. இது எதிர் காலத்தில் செயற்கையான சூரிய சக்தியை உருவாக்க சீனாவுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்றும் உலக அளவில் சீனா இந்த விவகாரத்தில் முன்னோடியாகதிகழும்வாய்ப்பை உருவாக்கி யுள்ளதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஏ)

# பாலியல் அடிமைகளாக நடத்தப்படும் மாணவிகள்

## நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் அட்டூழியம்



அபுயா, நவ.08

நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகளால் கடத்தப்படும் மாணவிகள் மதமாற்றம் செய்து பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்படுகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

போகோஹறாம் தீவிரவாதிகள் கடந்த 7 ஆண்டுகளாக நைஜீரியா, நைஜர், சாத், கேமரூன் போன்ற நாடுகளை மையப்படுத்தி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் நைஜீரியாவின் சிபொக் நகரில் பாடசாலை விடுதியில் தங்கியிருந்த 270 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவிகளை போகோஹறாம் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட மாணவிகளைத் தீவிரவாதிகள் மத மாற்றம் செய்து பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்படுகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இதற்கிடையே தீவிரவாதிகளின் பிடியில் இருந்து 21 மாணவிகள் கடந்த சில மாதங்களுக்கு முன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் கைக்குழந்தைகளுடன் காணப்பட்டனர். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வந்த பகுதியில் மேலும் ஒரு பாடசாலை மாணவியைக் கைக் குழந்தையுடன் இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

மரியம் மரியாங்கா என்ற இந்த மாணவி, இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை ஒன்றில் மீட்கப்பட்டுள்ளார் என்று நைஜீரிய அரசு அறிவித்துள்ளது. (ஏ)

## யுத்தத்தில் அப்பாவி மக்கள் இறப்பது சர்வ சாதாரணம்

### *சிரித்தவாறு கூறினார் சிரிய ஜனாதிபதி*

டமாஸ்கஸ், நவ.08

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரால் குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவிகள் உயிரிழக்கின்றமை சாதாரணமானது என்று அந்தநாட்டு ஜனாதிபதி பார் அல் அஸாத் சிரித்துக் கொண்டு பதிலளித்துள்ளார்.

சிரியாவில் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தில் சிக்கி ஆயிரக் கணக்கான அப்பாவிகள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

குழந்தைகள் உள்ளிட்டவர்கள் உயிரிழக்கின்றமை குறித்து சிரியா ஜனாதிபதியான பார் அல் அஸாத்திடம் நேற்று முன்தினம் கேள்விகள் எழுப்பப்பட்ட-.

அப்போது, 'உள்நாட்டுப் போரால் குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவிகள் உயிரிழந்து வரும் போது உங்களால் நிம்மதியாகத் தூங்க முடிகிறதா?' என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்தக்கேள்வியை கேட்டதும் அஸாத் வாய்விட்டுச்சிரித்துள்ளார். பின்னர், 'உங்கள் கேள்விக்கான அர்த்தம் எனக்குப் புரிகிறது. நான் ஒவ்வொரு நாளும் நிம்மதியாகத் தூங்குகிறேன். நன்றாகச் சாப்பிடுகிறேன். ஓய்வு நேரத்தில் விளையாடுகிறேன். இதில் எந்த மாற்றமும் இல்லை.

போர் நடைபெறும்போது அப்பாவிகள், குழந்தைகள் உயிரிழக்கின்றமை சாதாரணம். இதற்கு நாம் என்ன செய்ய முடியும். எம்மால் இயன்றவரை உயிரிழப்புக்களை தடுக்க முடியும். இந்த உயிரிழப்புக்களைப் பார்த்து கண் கலங்க நாம் ஒன்றும் தொண்டு நிறுவனம் நடத்தவில்லை. ஒரு நாட்டை ஆட்சிசெய்து வருகிறோம்.

போரில் அப்பாவிகள் கொல்லப்படுவதற்கு தீவிரவாதிகள் தான் காரணம்'' என்று ஜனாதிபதி அஸாத் பதிலளித்துள்ளார். (ஏ)

## ஹிலாரிக்கு எதிரான ஆதாரம் நிரூபணமாகவில்லை

வொஷிங்டன், நவ.08

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனின் மின்னஞ்சல்களில் எவ்விதகுற்றங்களுக்கான சாட்சியங்களையும் கண்டறியவில்லை என்று அமெரிக்க புலனாய்வு மற்றும் பாதுகாப்புச் சேவையான எப்.பி.ஐ.தெரிவித்துள்ளது.

எப்.பி ஐ யின் பணிப்பாளர் ஜேம்ஸ் கோமி இதனை அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இரகசியமான பல ஆவணங்கள், அமெரிக்க ராஜாங்க செயலாளராக இருந்த ஹிலாரி கிளிண்டனின், தனிப்பட்ட மின்னஞ்சலில் இருந்து கண்டறியப்பட்டன.

இதனை அமெரிக்காவின் எதிர்த்தரப்பு, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் குற்றச்சாட்டாக முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.(ஏ)

## அமெரிக்கத் தேர்தல் இன்று ஹிலாரி, டிரம்ப் தீவிர பிரசாரம்



வொஷிங்டன், நவ.08

உலகமே அதிகம் எதிர்பார்க்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இதனால் வேட்பாளர்களான ஹிலாரி, டிரம்ப் இருவரும் உச்சக்கட்ட பிரசாரத்தைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

இந்தத் தேர்தலில் 14 கோடியே 63 லட்சத்து 11 ஆயிரம் பேர் வாக்களிக்கத்தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 69 சதவீதமானோர் நிச்சயம் இந்தத் தேர்தலில் வாக்களிக்க உள்ளனர் என்று உறுதி அளித்துள்ளனர்.

ஏற்கனவே சுமார் 4 கோடி பேர் முன்கூட்டியே ஓட்டுப் போடும் வசதியைப் பயன்படுத்தி, வாக்களித்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஹிலாரிக்கு ஆதரவாக பிரசாரம் செய்துவரும் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, ஏற்கனவே தனது வாக்கைச் செலுத்திவிட்டார். இருப்பினும் அவர் யாருக்கு வாக்களித்தார் என்று வெளியிட மறுத்துவிட்டார்.

இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனுக்கும் (வயது 68), குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால் டிரம்புக்கும் (வயது 70) இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. கருத்துக் கணிப்புக்கள் ஹிலாரிக்கு சாதகமாக அமைந்தாலும், இரு வருக்கும் இடையேயான ஆதரவு வித்தியாசம் குறைவாக இருக்கிறது.

எனவே வாக்காளர்களை இறுதிக்கட்டமாகக் கவருவதில் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு, உச்சக்கட்டப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹிலாரி தனது பிரசாரத்துக்கு பொப் பாடகிகள் பியான்சே, கேத்தி பெர்ரி ஆகியோரைப் பயன்படுத்தி வருகிறார். டிரம்ப், நட்சத்திரப் பேச்சாளர்கள் யாரும் இல்லை என்பதால் அவர் தனது குடும்பத்தினரைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி உள்ளார். கடைசியாக 'மெக்கிளாட்சி மாரிஸ்ட்' கருத்துக் கணிப்பு முடிவு வெளியாகி இருக்கிறது. இதில் ஹிலாரிக்கு 44 சதவீத ஆதரவும், டிரம்புக்கு 43 சதவீத ஆதரவும் இருப்பது தெரிய வந்துள்ளது. (ஏ)



இத்தாலி பிரதமர் மட்ரிகோ ரென்ஸி அந்தநாட்டின் அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அமைக்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். இதனால் இது தொடர்பாக அந்நாட்டு மக்களிடம் பொது வாக்கெடுப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி நடத்தப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் பிரதமரின் இக்கருத்துக்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். பிரதமருக்கு எதிராக பொதுமக்கள் நடத்திய போராட்டம் வலுவடைந்து வருகிறது. (ஏ)

## எண்ணெய்க் கிணறுகளுக்கு தீ வைத்த ஐ.எஸ். தீவிரவாதிகள்

பக்தாத், நவ.08

ஈராக் நகரான மொசூலின் தெற்குத் திசையில் இருக்கும் ஒரு பகுதியிலிருந்து பின்வாங்கிய ஐ.எஸ். தீவிரவாதிகள், 19 எண்ணெய்க் கிணறுகளுக்குத் தீ வைத்துள்ளனர்.


இதனால் அங்குள்ள மக்கள் சுவாசப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் இதன் காரணமாக பல விலங்குகள் உயிரிழந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து வரும் புகை மாசு காரணமாக அங்குள்ள கால்நடைகள் கறுப்பாகத் தோற்றமளிக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மொசூலைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேலும் 6 எண்ணெய்க் கிணறுகளை ஐ.எஸ். அமைப்பினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற நிலையில் அவற்றுக்கும் தீ வைக்கக் கூடுமோ என்ற அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது. (ஏ)

# இந்து சமயத்தவரை வழிநடத்த இந்துசாதனம் காலத்தின் தேவை

## 'காலைக்கதிர்' அறிமுக நிகழ்வில் யாழ். ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.08

இந்து சமயத்தவர்களை வழிகாட்டும் வகையில் இந்து சாதனம் மீண்டும் வெளியிடப்பட வேண்டும். இதுகாலத்தின் தேவையாகும்.

-இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

'காலைக்கதிர்' பத்திகையின் அறிமுக நிகழ்வு கடந்த சனிக்கிழமை நீராவியடி, இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரை வழங்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்துசமயப் பத்திரிகையான இந்துசாதனம் பத்திரிகை மீண்டும் தொடர்ந்து வெளிவரவேண்டும்.

புதுப்பொலிவுடனும் கவர்சியுடனும் இந்து சமயத்தினரை வழிகாட்டும் விதமாகவும் இந்து சாதனம் பத்திரிகை வெளியிடப்படுவது காலத்தின் தேவையாகும்.

அதற்கு 'காலைக்கதிர்'பத்திரிகையின் ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரன் ஆவன செய்ய வேண்டும்.

இன்று பத்திரிகைகளைத் தொடங்குவது சாதனை அல்ல. மாறாக பத்திரிகைகளைத் தொடர்ந்து நடத்துவதே சாதனையாகும்.

யாழ்ப்பாணத்தில் முதலில் வெளிவருகின்றமை சமயப் பத்திரிகைகள் இன்றும் வெளி வருவது ஒரு சாதனையாகும். கிறிஸ்தவ சமயப் பத்திரிகையான உதயதாரகை, கத்தோலிக்க சமயப் பத்திரிகையான பாதுகாவலன், இந்து சமயப் பத்திரிகையான இந்து சாதனம் என்பன இன்றும் வந்து கொண்டிருக்கின்றன.

இங்கு மகிழ்வான விடயம் என்னவென்றால் இந்துசாதனம் பத்திரிகை வெளிவந்த அதே அச்சகத்தில் 'காலைக்கதிர்' பத்திரிகை அச்சிடப்படுவதாகும்.

கடந்த சில காலமாக தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கும் இந்து சாதனம் பத்திரிகையை திரும்ப அதே அச்சகத்தில் தொடர்ந்து வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளனர் என்று அறிந்தோம். இது மகிழ்வைத் தருகிறது.

பத்திகைகள் செய்திகளை வெளியிடும் போது செய்தி மூலங்களை உறுதிப்படுத்தி பிரசுரிக்க வேண்டும். கருத்துக்களை எழுந்தமானமாக வெளியிடுவது தவறானது. இந்த விடயத்தில் பத்திரிகைகள் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும்:- என்றார். (ஐ)

## தெற்காசிய பிராந்திய கற்கைகளுக்கான நிகழ்வு கண்டியில்

சுகாதாரம் மற்றும் குடி தண்ணீர் தொடர்பான தெற்காசிய பிராந்தியக் கற்கைகளுக்கான நிகழ்வு கண்டியில் இடம்பெறவுள்ளது. இன்று முதல் 11 ஆம் திகதி வரையான நான்கு நாள்கள் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலிருந்தும் வேர்ள்ட் விஷன் மற்றும் அரசு அலுவலர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆஸ்திரேலியா வேர்ள்ட் விஷன் நிதி உதவியுடன் இந்த நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. (இ-7)

## பெற்றோலிய வள அபிவிருத்தி திருத்தச் சட்டம் நாடாளுமன்றில்

கொழும்பு,நவ.08

பெற்றோலிய வள அபிவிருத்தி திருத்தச் சட்டத்தை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தச் சட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் நிறைவுக் கட்டத்தை அடைந்துள்ளன என்று அமைச்சர் சந்திமா வீரக் கொடி குறிப்பிட்டுள்ளார்.

உரிய முதலீட்டாளர்களிடம் இருந்து பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு என்பவற்றைக் கொள்வனவு செய்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பெற்றோலிய பயன்பாட்டின் போது நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட உள்ளன என்று மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தமின குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-11)

## மோ.சைக்கிள் விபத்தில் உத்தியோகத்தர் காயம்

எதிரெதிரே வந்த மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்து அரச ஊழியர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சண்முகம் சசிகுமார் (வயது - 29) என்பவரே காயங்களுக்கு உள்ளானவராவார். இச் சம்பவம் துணுக்காய் கல்விளான் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (9)

## ஆபாசங்கள் மூலம்...

(13 பக்கம் பக்கத் தொடர்ச்சி)

செம்மொழியாம் தமிழ் மொழியின் கலை வடிவங்கள், தமி ழர்களின் தொன்மை, அவர்களின் கலாசார விழுமியங்கள், தமிழர் களின் இலக்கியப் படைப்புக்கள், அவற்றின் உரை நடைகள், உயர்ந்த இலக்கியச் சுவைகள் ஆகியவற்றை எடுத்துக் கூறத் தக்கது முத்தமிழ் விழா. இந்த முத்தமிழ் விழாவில் மாணவர்கள் தமது மொழியாற்றலையும், எண்ணக் கருவூலங்களையும், சிந்தனைச் சிதறல்களையும் வெளிப்படுத்துவதற்கும் வளர்த் துக் கொள்வதற்கும் ஏதுவாக கடுகு என்ற பெயரைத்தாங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

கவிதை, கட்டுரை, சிறுகதை, இலக்கியம், சமயம் போன்ற பல விடயங்களைத் தாங்கி வருகின்ற இந்த நூல் தொகுப்பானது எமது மாணவ மாணவியரின் எழுத் தாக்கத்துக்கு உந்துதலாக அமையும். இவ்வாறான நூல் வெளியீடுகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மேலும் மேலும் மேற்கொள்ளப்படவேண்டும். எமது பதிப்புக்களில் எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட வேண்டும். எழுத்துப்பிழைகள் அற்ற ஒரு வெளியீடாக எமது பதிப்புக்களை வெளிக்கொண்டு வருவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். நான் றோயல் கல்லூரி சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த போது ஏதாவது ஓர் எழுத்துப் பிழை, நிறுத்தற் குறியீடுகள் தவறு ஆகியவற்றை எமது சஞ்சிகையில் கண்டு பிடியுங்கள் பார்ப்போம் என்று என் நண்பர்களிடம் சவால் விட்டதுண்டு. அந்த அளவுக்கு நாங்கள் பதிப்புக்க ளைப் பரிசீலித்து வெளியிட்டோம். - என்றார்.

## வவுனியாவில் இரத்ததானம்

வவுனியா,நவ.08

வவுனியா, தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பேரின்பநாதன் அனோஜன் தலைமையில் அண்மையில் இரத்ததான நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் முழுமையான முயற்சியில் திருநாவற்குளம் இளைஞர் கழகத்தின் பங்களிப்புடனும் இந்தச் சமூகப்பணி முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வின் பிரதமவிருந்தினராக வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா இ.சந்திரகுலசிங்கம் (மோகன்) கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த்தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், கழகத்தின் ஆலோசகர் மு. கண்ணதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதிய றோட்டறிக் கழகம் ஸ்தாபிதம்













புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் ஈ றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம், நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது, அதன் முதலாவது - ஸ்தாபக - தலைவராக றோட்டேறியன் யசோதை சரவணபவன் பதவி ஏற்றார். அவருக்கு றோட்டறியின் முன்னாள் ஆளுநர் கௌரி ராஜன் சின்னம் சூட்டிக் கௌரவிக்கின்றார். புதிய கழகத்தின் ஸ்தாபகச் சான்றிதழை, புதிய கழகத்தின் ஸ்தாபிதத்துக்கு அனுசரணை வழங்கிய யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் அக்காலப்பகுதிக்குரிய தலைவரும், தற்போதைய உதவி ஆளுநருமான றோட்டேறியன் எஸ்.அனுராஜ், ஸ்தாபகத் தலைவியிடம் வழங்குகின்றமையை இரண்டாவது படத்தில் காணலாம். நிகழ்வில் ஸ்தாபகத் தலைவி உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும், அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுகளில் ஒன்றையும் முறையே அடுத்தடுத்த படங்களில் காணலாம்.

# மட்டக்களப்பில் ஹொக்கி விளையாட்டு அறிமுகம்





மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாற்றில் முதன்முறையாக ஹொக்கி விளையாட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஹொக்கி சங்கத்தின் அனுசரணையுடன் இந்த வரலாற்று நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹொக்கி விளையாட்டுத்துறையினை அறிமுகம் செய்யும் வகையிலும், ஹொக்கி மாவட்ட சங்கத்தை அங்குராா்ப்பணம் செய்யும் நிகழ்வு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை ஹொக்கி சங்கத்தின் தலைவரும் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்கவின் முயற்சியால் மட்டக்களப்பு கல்வி வலயம் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் வை.கோபிநாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு உதவி பொலிஸ் அத்தியட்சர் கே.பி.கீர்த்திரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.


சிறப்பு அதிதிகளாக விமானப்படையின் கட்டளை அதிகாரி ஹெட்டியாராட்சி, மட்டக்களப்பு மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத் தலைவரும் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளருமான மா.உதயகுமார், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய தேர்தல் அத்தியட் சகர் சசீலன்,

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன் மற்றும் களுவாஞ்சிக்குடி பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது பல்வேறு கலாசார அணிவகுப்புடன், பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹொக்கி அணி வீர, வீராங்கனைகள் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வின்போது ஹொக்கி விளையாட்டை மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிமுகம்செய்யும் வகையில் விமானப்படை ஹொக்கி அணிக்கும், பொலிஸ் ஹொக்கி அணிக்கும் இடை யிலான போட்டியொன்றும் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இரு அணிகளும் சிறப்பான முறையில் விளையாடி இரண்டு கோல்கள் வீதம் பெற்றுக் கொண்டதன் காரணமாக போட்டி சமநிலையில் முடிவடைந்தது. மேலும், இந்த நிகழ்வின்போது கலாசார நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் மற்றும் யோகாசன நிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இலங்கையைத் தோற்கடித்தது மொங்கோலியா



ஆசிய கால்பந்துக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெறும் ஒற்றுமைக் கிண்ண காற்பந்து சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் இலங்கையும் மொங்கோலியாவும் மோதிக் கொண்டன.

போட்டியின் இரண்டாம் பாதியில் நியமோசோர் நரன்போல்ட் பெற்றுக் கொடுத்த பெனால்டி கோல்களின் உதவியுடன் மொங்கோலிய அணி இலங்கை அணியை 2-0 என்ற வித்தியாசத்தில் தோற்கடித்ததுடன், அரையிறுதி வாய்ப்புக்களையும் தக்கவைத்துக் கொண்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் அதிகமான நேரம் பந்தின் கையிருப்பை மொங்கோலியா தக்கவைத்திருந்த போதிலும், இலங்கை அணிக்கே அதிகளவு வாய்ப்புக்கள் கிடைத்தன. எனினும் இரண்டு அணிகளும் கோல்களை பெறாத நிலையில் முதற் பாதி சமநிலையில் நிறைவுற்றது.

7 ஆவது நிமிடத்தில் நிபுண பண்டாரவின் உதையை எதிரணியின் கோற்காப்பாளர் பாட்சேகான் சிறப்பாகத் தடுத்ததுடன், 18 ஆவது நிமிடத்தில் மொஹமட் ரிப்னாஸ் மேற்கொண்ட முயற்சியும் பலனளிக்கவில்லை.

32ஆவது நிமிடத்தில் மொங்கோலியாவின் முன்கள வீரர்களும் கோல் வாய்ப்பொன்றைத் தவறவிட்டதுடன், இடைவேளை நெருங்கும் போது இலங்கை வீரர்கள் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் துரதிர்ஷ்டவசமாக அவர்களாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

பண்டார மற்றும் சர்வானின் உதைகளும் இலக்கைத் தவறி கோல் கம்பத்தின் வெளியே சென்ற நிலையில் முதற் பாதி கோல்கள் இன்றி சமநிலையில் முடிவடைந்தது.

வாய்ப்புக்களை தவறவிட்ட இலங்கையின் வருத்தத்தை இரட்டிப்பாக்கிய மொங்கோலியா, இரண்டாம் பாதி ஆரம்பித்து 5ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் பெற்று போட்டியில் முன்னிலை பெற்றுக்கொண்டது.

நரன்போல்ட்டின் உதை பெனால்டி கட்டத்தினுள் வைத்து எடிசன் பிகுராடோவின் கையை உரசிய நிலையில், நடுவர் முஹம்மட் நஸ்மி நஸாருதீன் மொங்கோலிய அணிக்கு பெனால்டி வாய்ப்பை வழங்கித் தீர்ப்பளித்தார். இதன்போது கோற் காப்பாளர் சுஜான் பெரேராவை தாண்டி பந்தை உதைத்த நரன்போல்ட் தனது அணிக்கு முதற் கோலை இலகுவாப் பெற்றுக் கொடுத்தார்.

முதற் கோல் பெறப்பட்டு 16 நிமிடங்களின் பின்னர், கோல் காப்பாளர் சுஜான் பெரேரா பந்தைத் தடுக்க முயன்ற போது எதிரணி வீரர் பாட்டுர் தவாஜவின் மீது மோதுண்டதை முறைதவறிய ஆட்டமாக தீர்ப்பளித்த நடுவர் மற்று மொரு பெனால்டி வாய்ப்பை வழங்கினார். இம்முறையும் இலக்கைத் தவறாத நரன்போல்ட் மொங்கோலிய அணியின் வெற்றியை உறுதிசெய்தார். (கு)

# பாடும்மீன்கள் இலகு வெற்றி



உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு 2 தொடர் போட்டியில் பாடுமீன்கள் விளையாட்டுக் கழகம் இலகு வெற்றியைப் பெற்றுள்ளது.

அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற பிரிவு 2 உதைபந்தாட்டத்தின் முதற் சுப்பர் 8 போட்டியில் குருநகர் பாடும் மீன்கள் விளையாட்டு கழகம், கிண்ணியா பைனியர் கழகத்தை 4-0 என்ற கோற் கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத் தக்கது.

# யோகச்சந்திரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி வசமானது!



வல்வை விளையாட்டு கழகம் நடத்திய அமரர் யோகச்சந்திரன் ஞாபகார்த்த 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான 9 பேர் கொண்ட உதைப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் மணற்காடு சென் அன்ரனீஸ் அணியும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

முதற் பாதி ஆட்டத்தில் சென் அன்ரெனீஸ் அசத்தல் 02:00 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது இரண்டாவது பாதியாட்டத்தில் ஆட்டத்தை வேகப்படுத்தியது.

யங்கம்பன்ஸ் அனுராகாந்தனின் சிறந்த கோல்களுடன் முன்னிலையானது சென் அன்ரெனீஸ் அணி மேலும் ஒரு கோல் போட்டு ஆதிக்கம் செலுத்தியது.

யங்கம்பன்ஸ் அணி வீரர் கோல் போட்டு ஆட்டத்தை சமப் படுத்தினார். இறுதியாட்ட நேர முடிவில் 03:03 என்ற ரீதியில் ஆட்டம் சமநிலையானது.

வெற்றியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:02 என்ற கோற் கணக்கினால் மணற்காடு சென் அன்ரனீஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை தனதாக்கியது. கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டது.

சிறந்த ஆட்ட நாயகனாக மணற்காடு சென் அன்ரனீஸ் வீரர் நிமல் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்ட நாயகன் யங்கம்பன்ஸ் அணி வீரர் அனுராகாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# ஆஸியை வீழ்த்தியது தென்னாபிரிக்கா
## முன்னணி வீரர்கள் இல்லாது சாதனை

பெர்த், நவ.08

முன்னணி வீரர்கள் இல்லாது, ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் 177 ஓட்டங்களால் வீழ்த்தி சாதித்தது தென்னாபிரிக்க அணி.

ஆஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அந்த நாட்டு அணிக்கும் இடையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகின்றது. பெர்த்தில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் டி வில்லியர்ஸ், ஸ்ரேயன், ஆம்லா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் களமிறங்கவில்லை.

முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்கா 242, ஆஸ்திரேலியா 244 ஓட்டங்களை எடுத்தன.

2 ஆவது இனிங்ஸில் விஸ்வரூபம் எடுத்த தென்னாபிரிக்கா, 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 390 ஓட்டங்களை எடுத்து வலுவாக இருந்தது.

டி கொக் 16, பிலாண்டர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

4 ஆம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் டி கொக், பிலாண்டர் இருவரும் பொறுப்புடன் விளையாடி அரைச்சதம் அடித்தனர். இந்த ஜோடி 7 ஆவது விக்கெட்டுக்கு 116 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், டி கொக் (64) மிட்செல் மார்ஷ் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய மகராஜ் அதிரடியாக அசத்தினார். அணியின் 500 ஓட்டங்கள் கடந்த நிலையில், பிலாண்டர் 73 ஓட்டங்களில் ஸ்மித் பந்தில் க்ளீன் போல்டானார்.

தென்னாபிரிக்கா 8 விக்கெட் இழப்புக்கு 540 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. மகராஜ் 34 பந்தில் 41 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம், ஆஸ்திரேலியாவுக்கு 539 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.



துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஆஸ்திரேலியா ரபாடாவின் வேகத்தில் ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது. முதல் இனிங்ஸில் 97 ஓட்டங்களைக் குவித்த ஆஸியின் நம்பிக்கை நட்சத்திரம் வோர்னர் (35 ஓட்டங்கள்) பவுமாவின் அதிக வேக ரன் அவுட்டால் வெளியேறினார்.

ரபாடா வீசிய அதே ஓவரின் கடைசிப் பந்தில் ஷான் மார்ஷ் (15 ஓட்டங்களில்) ஆட்டமிழந்தார். ஓரளவுக்கு தாக்குப் பிடித்த கேப்டன் ஸ்மித்தையும் (34), வோகசையும் (1 ஓட்டம்) ரபாடா தனது அடுத்தடுத்த ஓவர்களில் வெளியேற்றினார்.

ஒருமுனையில், கவாஜா மட்டும் தாக்குப் பிடித்து பொறுப்பாக ஆடினார். சதத்தை எட்ட 3 ஓட்டங்களே தேவையாக இருந்த நிலையில் அவர் டுமினியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வந்தவர்களால் தென்னாபிரிக்கப் பந்துவீச்சை சமாளிக்க முடியவில்லை. ஸ்ரார்க் 13, சிடில் 13, ஹசல் வூட் 29 என ஆட்டமிழக்க 361 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் 177 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலையில் உள்ளது. ஆட்ட நாயகனாக 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய தென்னா பிரிக்காவின் ரபாடா தெரிவானார்.

# கருண் நாயரா? பாண்டியாவா?
## முதல் டெஸ்டில் யாருக்கு வாய்ப்பு?

ராஜ்கோட், நவ.08

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கருண் நாயர், ஹர்திக் பாண்டியா ஆகிய இருவரில் யாருக்கு வாய்ப்பளிப்பது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று இந்திய அணியின் பயிற்சியாளர் அனில் கும்ப்ளே கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இங்கிலாந்து அணிக்கு எதிராக 3 டெஸ்ட் தொடர்களிலும் நாம் தோல்வியைச் சந்தித்துள்ளோம். இருப்பினும் இப்போது 2 அணிகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டியில் ஆடவுள்ள அணியில் 6 ஆவது துடுப்பாட்ட வீராக கருண் நாயரை சேர்ப்பதா அல்லது 5 ஆவது பந்து வீச்சாளராக ஹர்திக் பாண்டியாவைச் சேர்ப்பதா என்று இன்னும் முடிவு செய்யவில்லை. இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். மணிக்கு 140 கிலோமீட்டர் வேகத்தில் பந்துவீசுவதுடன் ஓட்டங்களையும் குவிக்கும் பாண்டியர், இந்திய அணிக்கு மிகவும் உதவிகரமாக இருப்பார் என்று நம்புகிறோம். அதே நேரத்தில் கருண் நாயரும் உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பாக ஆடி இந்திய அணிக்குத் தேர்வு பெற்றுள்ளார். தற்போது ரோஹித் சர்மா காயமடைந்துள்ளது கருண் நாயருக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# உதைபந்தாட்ட வீரர் காயம்; கண் பார்வை பறிபோகும் ஆபத்து

துருக்கியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் எதிர்பாராதவிதமாக எதிரணி வீரரின் தாக்குதலால் பிரபல உதைபந்தாட்ட வீரர் ரொபின் வோன் பெர்ஸி படுகாயமடைந்து கண் பார்வை பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காற்பந்து ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பெனர்வஸ் உளவி அணிக்கும் அஹிர்சர் அணிக்கும் இடையேயான போட்டி துருக்கியிலுள்ள மனிஷா 19 மெயில்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்தே இரு அணி வீரர்களும் ஆக்ரோசமாக விளையாட ஆரம்பித்தனர். இதில் ஆரம்பத்தில் பெனர்வஸ் அணி சார்பாக வோன்பெர்சி (வயது 33) முதல் கோல் அடித்தார். இதன் காரணமாக எதிரணி வீரர்கள் சற்று ஆக்ரோசத்தை அதிகப்படுத்தி விளையாடினர்.

இதன் விளைவாக வோன் பெர்சி பனால்டி பகுதியில் பந்தை லாவகமாக கொண்டு செல்ல முயற்சி செய்த போது எதிரணி வீரரின் கைவிரல் அவருடைய இடது கண்ணில் பட்டதால், அவர் அந்த இடத்திலே கீழே விழுந்து துடித்தார்.

அதன் பின்னர் விரைந்து வந்த மருத்துவர்கள் அவருடைய கண்ணைத் திறந்து பார்த்து போது, கண் முழுவதும் இரத்தம் வழிந்ததால் அதிர்ச்சியடைந்து மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர்.

# ஸிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட்; வலுவான நிலையில் இலங்கை
## தனஞ்சய டி சில்வா, குணரட்ன அதிரடி சதங்கள்

ஹாராரே, நவ.08

ஸிம்பாப்வே அணிக்கு எதிராக 504 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையில் உள்ளது இலங்கை அணி.

இலங்கை – ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஹாரரேயில் தொடங்கியது.


நாணயச் சுழற்சியில் வென்ற ஸிம்பாப்வே அணித்தலைவர் கிரிமர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தொடக்கம் கொடுத்த கருணாரட்ன (26 ஓட்டங்கள்), கௌசல் சில்வா (37 ஓட்டங்கள்) நிலைக்கவில்லை.

அடுத்து வந்த குஷல் பெரேரா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளிக்கவே இலங்கை அணி தடுமாற ஆரம்பித்தது.

குஷல் மெண்டிஸ் நிதானமாக ஆடி 26 ஓட்டங்களுடன் வெளியேறினார். இலங்கை அணி 112 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், ஜோடி சேர்ந்த உபுல் தரங்கவும் தனஞ்சய டி சில்வாவும் அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

இருவரும் சிறப்பாக ஆடிய நிலையில் உபுல் தரங்க 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் தொடர்ந்து அசத்திய தனஞ்சய டி சில்வா சதம் விளாச குணரட்ன அவருக்குத் துணையாக நின்றார்.



இலங்கை அணி 290 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்றுத் தொடர்ந்த ஆட்டத்தில் மேலதிகமாக 27 ஓட்டங்களைச் சேர்த்து தனஞ்சய ஆட்டமிழந்தார். குணரட்ன தொடர்ந்து அசத்தினார். அவருடன் இணைந்த பெரேரா 34, ஹேரத் 27 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தனர்.

எனினும் அபாரமாக ஆடிய குணரட்ன தனது கன்னிச் சதத்தைப் பெற்று 116 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கவே இலங்கை அணி 504 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஸிம்பாப்வேயின் பந்துவீச்சில் திரினபனோ, கிறிமர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மஸகட்ஸா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஸிம்பாப்வே அணி தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

# கட்டுநாயக்கா தாக்குதல் குறித்து அறிந்திருந்தும் தகவல் தராதமைக்கு இரு மாதச் சிறைவாசம்

## ஏழு வருட விளக்கமறியலின் பின்னர் இப்படித் தீர்ப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 2001ஆம் ஆண்டு ஆடி மாதம் 24ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான வழக்கில் எதிரியான செல்லையா ஜெயகுமாருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் இரண்டு மாத தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்தே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், மே மாதம் 17ஆம் திகதி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா ஜெயக்குமாருக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2013ஆம் ஆண்டு நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது

இந்த வழக்கில் 2001ஆம் ஆண்டு ஆடி மாதம் 24 ஆம் திகதி அரச விரோத விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களான பொட்டுஅம்மான், கண்ணன், விநாயகன் ஆகியவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியமை குறித்து ஏற்கனவே நன்கு தெரிந்திருந்திருந்தார் என நம்பக்கூடிய காரணங்கள் இருந்தும் அதனைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தெரிவிப்பதிலிருந்து தவிர்த்துக் கொண்டதன் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது எதிரி தரப்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தனது வாதத்தில்

இந்த வழக்கில் எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் செல்லையா ஜெயகுமார் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மே மாதம் 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டதிலிருந்து 7 ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டிற்கு எதிரி குற்றவாளியாக விசாரணையில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் ஆகக்கூடிய தண்டனையாக 7 வருடங்களே நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட முடியும். ஆனால் நீதிமன்றினால் தண்டனை வழங்கப்படாமலேயே 7 வருடங்கள் அவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

மேலும் கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதலை தெரிந்திருந்தும் பொலிஸாருக்கு தகவல் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு எதிரியின் மேல் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் எதிரி கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். யுத்தத்தின் இறுதிக் கட்டம்வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவர். அவர் எவ்வாறு பொலிஸாருக்கு தகவல் வழங்க முடியும் என்பதை குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யும் பொழுது சட்டமா அதிபர் கவனத்தில் கொள்ளாமல் இந்தக் குற்றச்சாட்டை எதிரி மீது சுமத்தியுள்ளார்

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால் விசாரணையின் இறுதியில் எதிரி விடுதலை செய்யப்படலாம். ஆனால் வழக்கு விசாரணை முடிவடைந்து தீர்ப்பு வழங்கப்படும் வரை எதிரிக்குப் பிணை வழங்கப்படாத காரணத்தினால் இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து சிறையில் அவர் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் ஆகக்கூடிய தண்டனை 7 ஆண்டுகள். ஆனால் ஆகக் குறைந்த தண்டனையை நீதிமன்றமே தீர்மானிக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. எனவே இந்த நீதிமன்றம் ஆகக் குறைந்த தண்டனை வழங்குமாகவிருந்தால் எதிரி குற்றச்சாட்டை ஒத்துக் கொள்ளத் தயாராக உள்ளார் என நீதிமன்றில் தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி தனது வாதத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் மிகவும் பாரதூரமானது, அதனை எதிரி மறைத்துள்ளார் எனத் தெரிவித்தார்.

அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் வாதத்தையடுத்து நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எதிரிக்கு இரண்டு மாத தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (ம)

## கட்டுப்பாட்டு விலையை மீறும் மருந்தகங்கள் மீது நடவடிக்கை




யாழ்ப்பாணம், நவ.08

கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்கள் சுற்றிவளைப்பு செய்யப்பட்டு அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

மருந்துகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்த அவர், கட்டுப்பாட்டு விலையை மீறி மருந்துகளை விற்பனைசெய்யும் மருந்தகங்கள் குறித்து 011 307 1073, 011 309 2269 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் அறிவிக்க முடியும்.

011 268 6113 என்ற தொலைநகல் இலக்கம் மூலமும் தகவல் தெரிவிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.



இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்நாட்டு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். இதன்போது இலங்கையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தனது அலுவலகத்தில் பீரிஸின் கட்சி வாடகைக்கே இருக்கிறதாம்

## இப்படிச் சொல்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, நவ.08

ஜி.எல். பீரிஸ் தலைமையில் உருவாகியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனது அலுவலகத்தில் வாடகைக்கே இருக்கிறதாம் எனக் கூறியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்றஉறுப்பினருமானமஹிந்த ராஜபக்ஷ.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற பெயரில் உருவாக்கப்பட்ட கட்சிக்கு ஜி.எல். பீரிஸ் செயலாளராகஅறிவிக்கப்பட்டார். இந்தக் கட்சியை மஹிந்தவே உருவாக்கினார், அதன் தலைவராக அவர் விரைவில் பொறுப்பேற்பார் எனத் தகவல்கள் கசிந்தன.

ஆனாலும் மஹிந்த அக்கட்சிக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறிவந்தார். நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற மஹிந்த எம்.பியிடம் ஊடகவியலாளர்கள் புதிய கட்சியின் தலைமையகம் தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதற்குப்பதிலளித்தமஹிந்த ராஜபக்ஷ "பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்எனது அலுவலகத்தில்வாடகைக்கு அறை எடுத்துத் தனது கட்சியை நடத்தி வருகிறார். அரசாங்கத்துக்கு எதிராக எந்தக் கட்சி வந்தாலும் அதற்கு நாம் ஆதரவளிப்போம்."

"நாம்அந்தக்கட்சிக்குஉதவத் தேவையில்லை. ஆனால் எமக்கு அந்தக் கட்சி ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இன்னமும் நான் எனது அலுவலகத்துக்குசெல்லவில்லை"–என்றார்.

## அச்சுவேலி – சிறுப்பிட்டிச் சம்பவம்

# 16 படையினரின் விளக்கமறியலும் நீடிப்பு குற்றப்பத்திரத்தை விரைவுபடுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், நவ.08

அச்சுவேலி சிறுப்பிட்டியில் இரண்டு சிவிலியன்கள் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 படையினருக்கும் எதிராக விரைவாக குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் சிசதீஸ்வரன் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக தொடர்ந்து வழக்கு விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டார்.

நேற்று இராணுவத்தினர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி மு.றெமீடியஸ் சுருக்கமுறையற்ற விசாரணை இல்லாமல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு எதிராக விரைவில் குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

இதன்போது மன்றில் ஆஜராகிய அச்சுவேலி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, மேற்படி இராணுவத்தினருக்கு எதிராக எந்தவித சாட்சிக் கோவைகளும் தற்போது பொலிஸ் நிலையத்தில் இல்லை என்றும் இது தொடர்பான கோவைகள் யாவும் சட்டமா அதிபர் திணைக்களத்திடமே உள்ளன என்றும் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சிக் கோவைகளை மீட்டு விரைவில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டார். இராணுவத்தினரை அடுத்த மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவத்தில் சரஸ்வதி சௌந்தரராஜன், முத்துப்பிள்ளை ஜெயசீலன் ஆகிய இரு சிவிலியன்களை கைது செய்து அவர்கள் காணாமற் போகச் காரணமாக இருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அப்போது அச்செழு பகுதியில் நிலைகொண்டிருந்த 511ஆம் படையணியில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய்களே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம-09)

# வடக்கில் கண்ணி, மிதிவெடி அகற்ற ரூ.22 கோடி பிரிட்டன் வழங்கும்

வடக்கில் அடுத்த மூன்று ஆண்டுகளில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றும் பணிக்காக சுமார் 22 கோடி ரூபா (12 இலட்சம் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்) நிதிஉதவியைபிரிட்டன்வழங்கும்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ளபிரிட்டனின்பொதுநலவாய அலுவலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரகளுக்கான இராஜாங்க அமைச்சர் ஜோனீஸ் அன்லி பிசி யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

'ஹலோ டிரஸ்ட்' கண்ணிவெடியகற்றும் நிறுவனம் மூலம் இந்த உதவித் திட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

கடந்த வருடம் மோல்டாவில் இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின்தலைவர்கள்மாநாட்டின்போது இலங்கைக்கு சுமார் 120 கோடி (66 இலட்சம் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்) உதவித் திட்டம் வழங்கப்படும் எனபிரிட்டன் தரப்பினால் அறிவிக்கப்பட்டிருந் தது. அதன் ஒரு பகுதியே இப்போது வடக்கில் கண்ணிவெடியகற்றலுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தபிரிட்டிஷ்அமைச்சர், 'ஹலோ டிரஸ்ட்' கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டுக் களத்துக்கு விஜயம் செய்தமையோடு அத்திட்டத்தினால் பயனடைந்த – இடம்பெயர்ந்த – மக்களையும் சந்தித்துப் பேசினார்.

# தலைமன்னார் பகுதியிலிருந்து இந்தியாவுக்கு 5 கிலோ தங்கம் கடத்த முயன்ற 2 பேர் கைது

தலைமன்னார் கடற்பரப்பின் ஊடாக இந்தியாவுக்கு 5 கிலோ கிராம் தங்கபிஸ்கட்களை கடத்த முற்பட்ட இருவரை நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர் என கடற்படை ஊடகப்பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

தலைமன்னாரிலிருந்து மேற்கு கடற்பகுதி ஊடாக ஒரு டிங்கி படகில் தங்க பிஸ்கட்கள் கடத்தப்படுவதாக கடற்படைக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து குறித்த படகை 12 கடல் மைல் தொலைவில் வைத்து மறித்து சோதனையிட்ட போது அணியத்தின் கீழ் உள்ள வலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கபிஸ்கட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் மற்றும் சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணையின் பொருட்டு சுங்கத்திணைக்கள வடமாகாண அலுவலக அதிகாரிகளின் முன் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். சான்றுப்பொருள்களும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்றும் கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ம-09)

# கொழும்பில் காணாமற்போனவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

## *மரணத்தில் சந்தேகம், பொலிஸ் விசாரணை*

கொழும்பில் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் காணாமல்போன காரைதீவு இளம் குடுபஸ்தரின் சடலம் நேற்றுத் திங்கட்கிழமை பகல் மொறட்டுவவிலுள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. காரைதீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை விவேகானந்தன் (வயது-48) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலத்தை மீட்ட மொறட்டுவ பொலிஸார் மேலதிக பரிசோதனை மற்றும் விசாரணைக்காக மொறட்டுவ வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அவர் வேலைசெய்த பல்கலைக்கழகத்திற்கு முன்னாலுள்ள ஆற்றோரமருகே இருந்த பாழடைந்த கிணற்றில் அவரதுசடலம் கிடந்தது எனத் தெரிவித்துள்ள பொலிஸார் அவரது மனைவி, குடும்பத்தினரை கொழும்புக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

அவர் கடந்த ஒரு வருடகாலமாக ஜசிசி கம்பனியில் தச்சுத் தொழில் செய்துவந்தார். மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் வேலை நடப்பதால் அங்கு ஒரு அறையில் அவர் தங்கியிருந்து ஏனைய தொழிலாளர்களுடன் தொழிலுக் குச் சென்றுவந்தார்.

கடந்தவெள்ளிக்கிழமைஅவரிடமிருந்து மனைவிக்கு அவரது தொலைபேசியிலே ஒரு தகவல் வந்தது. இங்கொரு பிரச்சினை நடக்கிறது, எனது அறையைச் சுற்றி சிலர் நிற்கிறார்கள் என்று அவர் கூறினார். சில மணிநேரத்தில் எல்லாம் சுமுகமாக முடிவடைந்துவிட்டது என்றும் அவர் தெரிவித்தார் என மனைவி கூறுகின்றார்.

பின்னர் அன்று பிற்பகல் அதே தொலைபேசியில் வந்த அழைப்பில் சிங்கள மொழியில் உரையாடிய ஒருவர் உங்கள் கணவனைக் காணவில்லை என்று தெரிவித்தார் என்றும் மனைவி சொல்கிறார்.

அன்றிரவு மனைவி மற்றும் உறவினர்கள் கொழும்பு சென்று அவர் வாழ்ந்த அறையைப் பார்த்தபோது அது சீல் இடப்பட்டிருந் தது. அது பொலிஸார் இட்ட சீல் என்பது பின்னர் தெரியவந்தது.

உடனே மொரட்டுவ பொலிஸாரிடம் சென்று விடயத்தைக் கூறவே அவர்களும் வந்து சீலை உடைத்து அறையைப் பார்த்த போது உள்ளே பெட்சீற்றிலும் சமையல் பகுதியிலும் இரத்தக் கறைகள் காணப்பட்டன. மேலும் இரத்தக்கறை படிந்த சுத்தியல் ஒன்றும் காணப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்று நீதிபதி நடத்திய விசாரணைகளைத் தொடர்ந்து மோப்ப நாய்களின் உதவியுடனும் தேடுதல் நடத்தப்பட்டது. ஆனால், மழை காரணமாக எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

எனவே, மனைவி உள்ளிட்ட குடும்பத்தினரை வீட்டுக்குச் செல்லுமாறும் தகவல் கிடைத்தால் அறிவிப்போம் என்றும் கூறிய பொலிஸார் அவர்களைக் காரைதீவுக்கு அனுப்பினர்.

இந்நிலையில், நேற்றைய தினம் அவர் பாழடைந்த கிணறொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் என குடும்பத்தினருக்குத் தகவல் கிடைத்தது. அவரது மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத்தில் சில முறைகேடுகள் இடம்பெற்றன என்றும் கூறப்பட்டது.

இவை குறித்தெல்லாம் பொதுக் கணக்குக் குழு அறிக்கையில் விவரங்கள், குறிப்புகள், அவதானங்கள் இடம்பெற்றிருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

மேலும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியிடல் மூலம் முன்னெடுக்கப்பட்ட 'நெல்சிப்' செயற்திட்டத்திலும் பெரும் மோசடிகள், துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் இடம்பெற்றன என்று கூறப்பட்டு வந்தது. அந்த விவகாரங்களை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுக்களின் கண்டுபிடிப்புகள், அவதானங்கள், அறிக்கைகள் என்பவையும் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையுடன் சேர்ந்து இன்று சபையில் சமர்ப்பிக்கப்படலாம் என்ற எதிர்ப்பார்ப்பும் நிலவுகின்றது.

இந்த விவகாரங்கள் தொடர்பில் சபையின் பெரும்பாலான ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சூடான கருத்து நிலைப்பாட்டில் இருக்கின்றமையால், கொதிநிலைமை இன்றைய அமர்வில் - வடக்கு மாகாண சபையின் 65 ஆவது அமர்வில் - தகிக்கும் வகையில் பிரதிபலிக்கும் எனக் கூறப்பட்டது.

## அங்கவீனமான இரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்போதே பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும், தண்ணீரைப் பீய்ச்சியும் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல்களால் அங்கவீனர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகினர்.

## கொலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழிப்பதற்காக இந்திய அரசாங்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ, ஈரோஸ் போன்ற இயக்கங்களுக்கு ஆயுதங்களை வழங்கியது. ஈ.பி.டி.பி. கட்சிக்கு அதில் தொடர்பு இல்லை.

தவிரவும், ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவாகவோ, இராணுவத் துணைக் குழுவாகவோ அல்லது புலிகளைத் தேடிக் கொல்லும் அமைப்பாகவோ இருந்ததில்லை. 1990 ஆம் ஆண்டு அரசியல் கட்சியாக செயற்பட்டபோது ஆயுதங்களையும் இராணுவத்தையும் அரசு வழங்கியது.

அச்சமயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட ஆயுதங்கள் வழங்கப்பட்டன. ஆகவே யாரும் இரத்தக் கறை படியாதவர்கள், ஆயுதங்களை ஏந்தாதவர்கள் எனக் கூற முடியாது - என்றார் அவர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்த விடயங்களை அவர் தெரிவித்தார்.

மேலும், ஈ.பி.டி.பி. கட்சியினர் கொள்ளையடிப்பதோ, கொலை செய்வதோ, கப்பம் வாங்குவதோ இல்லை. கட்சி மீது சுமத்தப்பட்ட பெரும்பான்மைக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆதாரமற்றவை; அடிப்படை ஏதுமற்றவை. அரசியல் உள் நோக்கங்களுக்காகவும் காழ்ப்புணர்வோடு எம் மீது பழிகள் சுமத்தப்பட்டன.

ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சட்டவிரோத, சமூக விரோத செயல்களில் ஈடுபட்டனர் எனத் தெரியவந்த போது அவர்களை கட்சியிலிருந்து விலக்கி உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன - என்றார்.

வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் தமிழர்களின் வரலாறு குறிப்பிடப்படவில்லை. மொழி பெயர்ப்பாளர்களாகவும், எழுத்துப் பிழை திருத்துபவர்களாகவும் தமிழ் கல்விமான்கள் அப்போது இருந்தமையாலேயே அவ்வாறு நடந்தது.

தமிழர் வரலாறு மறைபடவும் திடமான தீர்வை முன் வைக்கவும் முடியாமல் இருப்பதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் முறையாக செயற்படாமையே காரணம். கடந்த கால, நிகழ்கால தமிழ்த் தலைமைகள் தமிழ் இளைஞர் சமுதாயத்தை சரியாக வழிநடத்தவும் தவறி விட்டன - என்றும் டக்ளஸ் இதன்போது குற்றச்சாட்டுக் களை முன் வைத்தார்.

## பிணை அனுமதி

முன்னாள் பிரதியமைச்சர் சரத்குமார குணரட்ணவை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசுப் பிணையிலும், 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்ல நீர்கொழும்பு மேல் நீதிமன்று நேற்று அனுமதித்தது.

கடந்த 2002ஆம் ஆண்டு நீர்கொழும்பில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை சரத்குமார தனது கார் மூலம் விபத்து ஏற்படுத்திக் கொன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக நீர்கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் முன்னிலையாகத் தவறிய சரத்குமாரவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து கடந்த 24 ஆம் திகதி அவர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் செய்த பிணை விண்ணப்பத்தை ஏற்ற மேல் நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்ல அவரை அனுமதித்தது.

## தற்கொலைக் குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னால் வைத்துக் கொண்டு அந்த நிகழ்வின் நன்றியுரையை வழங்கிய சமயமே இந்த விடயம் குறித்துப் பிரஸ்தாபித்தார் சயந்தன்.

இவ்விடயம் குறித்து சயந்தன் ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:-

நான் சொல்லப் போகின்ற ஒரு விடயம் சில வேளைகளில் உங்களுக்கு நம்பக் கடினமானதாக இருக்கலாம். ஆனால் அது மிகவும் பாரதூரமான விடயம். இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று -

கடந்தகாலங்களில் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்தவாகள் ( இப்போது) கட்சியில் வந்து சேர்வதற்கு கேட்கின்றார்கள். அவர்கள் குறித்தும் நாங்கள் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

அது மாத்திரமல்ல, மிக முக்கியமான விடயம் - மறவன்புலோவில் ஒரு தற்கொலை அங்கி கண்டெடுக்கப்பட்டது உங்களுக்குத்தெரியும். அந்தத் தற்கொலை அங்கிக்குப் பின்னால் உள்ள அரசியல் யாருக்கும் தெரியாது.

புலன் விசாரணையில் இருப்பதால் வெளியே வரவில்லை. ஆனால் ஒரு விடயத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகின்றேன். அந்தத் தற்கொலை அங்கியை ஓரிடத்தில் இருந்து இன்னொர் இடத்துக்கு கடத்தியதில் பிரதான சூத்திரதாரி என்று சொல்லப்படுபவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர் சாவகச்சேரியில் இருக்கின்றார். என்னுடைய அலுவலகத்துக்கு நேர் எதிரே உள்ள ஒரு வீட்டில் வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு பெண்ணை தங்கச் செய்து, அங்கு தங்கியி ருந்து கொண்டு, எங்கள் கட்சிப் பேச்சாளர் சுமந்திரன் அடிக்கடி வந்து போகும் இடமான என்னுடைய அலுவலகம் அடையாளம் காணப்பட்டு, வேவு பார்க்கப்பட்டிருக்கின்றது. இது ஒரு பொய்யான விடயம் அல்ல. இது உண்மையான, பாரதூரமான விடயம்.

இந்த அடிப்படையில் நாங்கள் (குறுக்கீடுகள்) .... பொறுங்கோ ..... பொறுங்கோ .... நான் பேசிய பிறகு நீங்கள் பேசலாம்... சரி...

ஆகையினால், இந்த விடயங்களை நாங்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிருக்கின்றது. - என்றார். (2)

## அங்கவீனமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இயலாமைக்கான ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் அவர்கள் தமக்கு சேவை ஓய்வூதியமும் வழங்க வேண்டும் எனக் கேட்டு கடந்த சில நாள்களாக ஜனாதிபதி செயலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறு போராட்டம் நடத்தியவர்களை தமது அலுவலகத்துக்கு அழைத்துப் பேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்களுக்கு சேவை ஓய்வூதியமும் வழங்குவதாக எழுத்து மூல உறுதி வழங்கினார். இதையடுத்தே அங்கவீன இராணுவத்தினரின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இவர்களுக்கான சேவை ஓய்வூதியத்தை வழங்க ஜனாதிபதி ஏற்கனவே விசேட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார் என்றும் அதில் வரும் பெப்ரவரி மாதத்திலிருந்து அவர்களுக்கு சேவை ஓய்வூதியமும் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிகின்றது.

## தமிழ்த் தேசிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகவோ அலெக்ஸ் சம்பந்தமாக எந்தவிதமான தகவலையும் தெரிவிக்க வில்லை. இது தொடர்பாக நாம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளருக்கு உடனடியாக அறிவித்திருந்தோம்.

சி.ஐ.டியினர்தான் அலெக்ஸைக்கொண்டு சென்றனர் எனத் தங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் எங்களுக்குத் தெரிவித்தார்.

அலெக்ஸிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் 24 மணித்தியாலத்திற்குள் அவரை விடுவிப்பார்கள் எனவும் அதனைத் தாண்டியும் விசாரணை மேற்கொள்வதாயின் அவரது கைது சம்பந்தமாக எங்களது கட்சிக்கு அல்லது அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரி விக்கப்பட்டிருந்தும் இதுவரை அவ்வாறு அறிவிக்கப்படவில்லை.

அலெக்ஸ் அரவிந்தன் மக்கள் மட்டத்திலே எங்களுடைய அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்கு மிகவும் தீவிரமாகச் செயற்பட்டவர். நாம் சர்வதேச பொறுப்புக் கூறலுக்கான கையொப்பப் போராட்டத்தை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் மேற்கொண்டபோது பத்து நாட் களுக்குள் ஒன்றரை இலட்சம் கையொப்பங்களை திரட்டுவதில் முன்னின்று செயற்பட்டவர்.

அது மட்டுமல்லாமல் 'எழுக தமிழ்' பேரணி வெற்றிகரமாக இடம்பெறுவதற்கும், அது தொடர்பான கருத்துருவாக்கத்திற்கும் அலெக்ஸ் மிக மிக முக்கியமான செயற்பாட்டாளர். 'எழுக தமிழ்' பேரணியை மட்டக்களப்பில் முன்னெடுப்பதற்காக நாம் தமிழ் மக்கள் பேரவையு டன் இணைந்து செயற்பட்டுவரும் ஒரு சூழலில் தான் அலெக்ஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டதொரு நிலையில் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு முன்னெடுக்கப்படும் போது தான் அரசிற்கு ஒரு நெருக்கடியைக் கொடுத்துத் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என நாங்கள் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் கூறிவருகின்றோம்.

எமது கட்சி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயற்படுவதற்கு தமிழ்மக்கள் பேரவையின் கொள்கைகளே காரணம். - என்றார். (ம-7-12)